மேழிச்செல்வம்

மாத இதழ்



சோபகிருது௵ 839 P ஐப்பசி௴

மண்வளப் பாதுகாப்பு தகவல் கருத்தரங்கு

அமைச்சர் திரு பி. கக்கன் அவர்கள் துவக்கிவைத்து பேசுதல்

விலை 25 நயா பைசா
வருட சந்தா ரூ. 3

[1963-ம் ௵ அக்டோபர்-நவம்பர் ௴



கருத்தரங்கு துவக்க விழா விற்கு வந்திருந்தோரை விவசாயத்துறை நெறியாளர் திரு வி. கார்த்திகேயன், I.A.S., வரவேற்றல்.

அமெரிக்க நிபுணர் திரு எம். ஹாரிசன் டெய்லர் பேசுதல்.



கருத்தரங்கு துவக்க வைபவத்தில் அமைச்சர், அமெரிக்க நிபுணர் திரு எச். டெய்லர், விவசாயத் துறை நெறியாளர், கோவை விவசாயக் கல்லூரி முதல்வர், கூட்டு நெறியாளர், விவசாயச் செய்தி அலுவலர் முதலானோர்.

உள்ளுறை

	பக்கம்
சென்னையில் மண்வளப் பாதுகாப்புத் தகவல் கருத்தரங்கு	5
ஜப்பான் முறைச் சாகுபடியில் இரு மடங்கு மகசூல் கிடைத்தது............ வால குருவா ரெட்டியார்.	6
கரும்பின் தரத்தை உயர்த்தி அதிக லாபம் அடைவீர்	8
காவேரி மேட்டூர் நீர்ப் பாசன திட்டத்தில் வேர்க்கடலை சாகுபடி	10
கொடி எலுமிச்சை	11
தஞ்சை மாவட்டத்தில் தாளடி நெற்பயிரும் குருத்துப் பூச்சியும்	14
திராட்சையில் காணும் பூசண நோய்களும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்.	15
வளமான திட்டம்	17
பாசிப் பயறில் பொறுக்கு விதை கோ. 1	19
நாற்றுப் பயிரிட ஆற்றுப் பெருக்கு எதற்கு ?	20
விவசாயச் செய்திக் கதிர்	22
எண்ணெய் வித்துக்கள் தீவிர சாகுபடி	24
கால் நடை சுகாதார வெளியீடு—செப்டம்பர் '63	26
1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திய காலநிலை அறிக்கை..	27
மேழிச்செல்வம் சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறோம்	28
ஆகாச வாணியின் திருச்சி வானொலி நிலையம்..	29
துவரை ஆராய்ச்சியில் கண்ட ஓர் வெற்றி	31

விளம்பரங்கள் :

கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ், லிட்	4
டாடா-பைஸன் அண்டு ரால்லீஸ்	7
ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி	13, 25
ராஜா பண்ணைத் தோட்டம்	14
ராலீஸ் இந்தியா	16
ஜான்ஸ்டன் (வெர்டிகல் பம்புகள்)	21
கோத்தாரியின் சூபர் பாஸ்பேட்	23

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு தானிய வசதி !

தானியங்கள் டன் கணக்கில் சேமிப்பு கிடங்குகளுக்கு அனுப்பப் படுகின்றன.
இவை நல்பூமி நமக்கு மனமுவந்து வழங்கிய செல்வம். பூமியில் நல்ல விளைச்சல் கிடைக்கக் காலம் தவருமல் யதேஷ்டமான ஜலவசதி கிடைக்கவேண்டும்.

இங்குதான் **கிர்லோஸ்கர் டீஸல் என்ஜின்ஸ்** பிரதானமான பணியாற்றுகின்றன. ஆற்றிலிருந்தும், கிணற்றிலிருந்தும், ஓடையிலிருந்தும், ஏரியிலிருந்தும் ஜலம் இறைக்க பம்புகளை இயக்குகின்றன. ஜலவசதி நிறைந்தால் பூமியும் செழித்து ஆண்டுதோறும் அமோகமான விளைச்சல் கிடைக்கும்.

பல்லாண்டுகள் மேன்மேலும் சீர்திருத்தப் பட்டதும், தரநேர்த்திக்கும், நம்பகத் தன்மைக்கும் பெயர்பெற்றதுமான இந்த என்ஜின்கள் உற்பத்தியைப் பெருக்கவும், பஞ்சத்தைத் தவிர்க்கவும், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் பசிப்பிணி என்ற பெரும் பிரச்னையைத் தீர்க்கவும் உதவுகின்றன.

கிர்லோஸ்கர்

5 ஹார்ஸ் பவர் டீஸல் என்ஜின்



கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ் லிட்.,
கிர்கி, பூனு-3 (இந்தியா)



TOM & BAY/KOEL/T-15/63

மலர் 20 | சோபகிருதுஸு ஐப்பசிமீ—1963—அக்டோபர்-நவம்பர் | இதழ் 10

சென்னையில் மண்வளப் பாதுகாப்பு தகவல் கருத்தரங்கு.

(விவாசயச் செய்தி நிலயம்)

திரு. பி. கக்கன், தமிழ்நாடு உள்துறை, விவசாய அமைச்சர் 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ம் தேதியன்று சென்னை பாலர் அரங்கில் நான்கு நாள் மண்வளப் பாதுகாப்பு பற்றிய தகவல் கருத்தரங்கை துவக்கி வைத்தார்.

விவசாயத் துறை நெறியாளர் திரு. வி. கார்த்திகேயன், I.A.S., அமைச்சர் அவர்களையும், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க ஏஜென்ஸி நிலவள் நீர் உபயோக விசேஷ பிரிவைச் சேர்ந்த திரு. எம். ஹாரிசன் டெய்லர் அவர்களையும், மற்றவர்களையும் வரவேற்றுப் பேசுகையில் உணவு உற்பத்தி சீராக நடைபெற வழிவகை செய்வதே இக்கருத்தரங்கின் நோக்கம் என்றும் கூறினர். இன்றைய தமிழ் நாட்டில் உள்ள 160 லட்சம் எக்கர் சாகுபடி நிலத்தில் 100 லட்சம் எக்கர்கள் பாசன வசதியற்றவை என்றும், இந் நிலத்தில் 1½ லட்சம் எக்கர்களில் மண் அரிப்பு தடுப்பு வேலைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கிறதென்றும், மூன்றும் ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் 4 லட்சம் எக்கர்களாக அதிகரிக்கப்படும் என்றும் கூறினர். இதற்கு அத்தியாவசியமான தேவை பயிற்சி பெற்ற அலுவலர்கள் என்றுலும், விவசாயிகளும் மண் வள பாதுகாப்பின் அவசியத்தையும், தடுப்பு முறைகளையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இக் கருத்தரங்கு இக் கருத்தினையே கொண்டு கிராம மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில், அவர்கள் சூழ்நிலைக்கு ஒத்த மண்வளப் பாதுகாப்பு சம்பந்தமான தகவல் சாதனங்களை தயார் செய்யும் என்று நம்புவதாகவும் கூறினர்.

அடுத்து திரு. எச். டெய்லர் அவர்கள் பேசுகையில் மருத்துவர்கள் உடலுறுப்புக்களுக்கு சிகிச்சை செய்வதுபோல், விவசாயிகள் மண்ணை நன்கு கவனித்து பராமரிக்க வேண்டியது அவசியம் என்றும் கூறினர். மண்வளம், தண்ணீர் சாதனங்களை விஞ்ஞான முறையில் ஆராய்ந்து கவனம் செலுத்துவதன் மூலம் ஆசியா கண்டத்தில் உணவு உற்பத்தித் துறையில் இந்தியாவை ஆசியாவின் உணவுக் களஞ்சியமாகச் செய்வது சாத்தியம் என்றும் கூறினர்.

அமைச்சர் திரு. பி. கக்கன் பேசுகையில் தமிழ் நாட்டில் விவசாயச் செய்தி நிலையம், அதன் ஆரம்ப காலத்திலிருந்தே முதன் மந்திரி திரு. பக்தவத்சலத்தின் ஆசி பெற்று நன்கு பணியாற்றி வருகிறது என்றும், நிலவளப் பாதுகாப்புப் பற்றிய கருத்தரங்கு இதுதான் முதலாவதாகும் என்றும் கூறினர்.

மேலும் கூறியதாவது :—

" அடை மழை பெய்யும்பொழுது நிலத்தின் மேல் பரப்பிலுள்ள மண்வளம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிறது. மண்வளப் பாதுகாப்புத் திட்டம் நிலச்சத்து இப்படி அடித்துச் செல்லப்படாமல் தடுப்பதோடு, பூமிக்கடியில் நீர்நிலை அபிவிருத்தியடையவும் உதவுகிறது.

இத் திட்டத்தின் கீழ் ஏராளமான நிலப்பரப்பு வரவிருப்பதால் பெருவாரியான விவசாயிகள் இத் திட்டத்தைப் பற்றி நன்கு உணரச் செய்தால்தான் அவர்களது பூரண ஒத்துழைப்புக் கிடைத்து திட்டம் முழுப் பலனை அளிக்கும். அப்போதுதான் திட்டத்தின் பலனை அவர்களும் அடையமுடியும்".

" இது வரையில் பல்வேறு விவசாயத் திட்டங்கள் சம்பந்தமாக விவசாயச் செய்தி நிலையம் பல துண்டு பிரசுரங்களையும், காட்சி சாதனங்களையும் தயார் செய்து வெளியிட்டிருக்கிறார்கள். 433 வெளியீடுகளை, 4 மில்லியன் பிரதிகளுக்குமேல் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன, இருந்தபோதிலும் ஓரிரு சந்தர்ப் பங்களைத் தவிர விவசாயிகளுக்கு நேரிடையாக அவை வழங்கப்படவில்லை.

ஆனால், இக் கருத்தரங்கில் போதிய தகவல்கள் திரட்டப்பட்டு மண்வளப் பாதுகாப்பு விஸ்தரிக்கப்படும் பகுதிகளில் இருக்கும் விவசாயிகளுக்கெல்லாம் நேரிடையாக வழங்கத் தீர்மானித்திருக்கிறோம்" என்றும் கூறினார்.

இத் திட்டத்தில் பணியாற்றும் அலுவலர்களை எந்தவித புகார்களுக்கும் இடமளிக்காது, இத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். விவசாயத் துறை கூட்டு நெறியாளர் (பொறியியல் பிரிவு) திரு. சங்கர நாராயண ரெட்டி நன்றி கூறினார்.

கருத்தரங்கு :

இதையடுத்து 12-ம் தேதி வரை கருத்தரங்கு நான்கு நாள் நடைபெற்றது. இதில் விவசாயத்துறையைச் சேர்ந்த 40-க்கு மேற்பட்ட மண்வளப் பாதுகாப்பு அலுவலர்களும், விவசாய அலுவலர்களும், விவசாயிகளும் கலந்து கொண்டனர். தமிழ்நாடு விவசாயச் செய்தி அலுவலர் திரு. எம். ஜே. டேவிட், அமெரிக்க நிபுணர் திரு. எச். டெய்லர் அவர்களின் மேற்பார்வையில் 50 தகவல், காட்சி சாதனங்கள் தயார் செய்யப்பட்டன.

ஜப்பான் முறைச் சாகுபடியில் இரு மடங்கு மகசூல் கிடைத்தது...

வாலகுருவா ரெட்டியார்.

[நா. ம. அப்துல் சமது, பி.எஸ்.சி., (விவசாய) வேளாண்மை விரிவினை அலுவலர் , கள்ளிக்குடி வட்டாரம்].

மதுரை மாவட்டத்திலுள்ள கள்ளிக்குடி வட்டாரம் கரிசல் மண் நிறைந்த வரண்ட நிலம். போதிய மழை யில்லை. இருப்பினும் பம்பு செட்டுகள் மூலம் அதிக நிலங் களில் தோட்டச் சாகுபடி செய்யப்படுகின்றன. இவ் வட்டாரத்திலுள்ள வடக்கம்பட்டியில் வாழும் வாலகுருவா ரெட்டியாருக்குச் சொந்தமானது 4·35 எக்கர். பம்புசெட்டு ஒன்றும் உள்ளது. வருடத்திற்கு மூன்று பயிர் சாகுபடி செய்கிறார். நிலக்கடலை சாகுபடிக்குப் பின் நெல் சாகுபடி செய்கிறார். ஜப்பானிய முறைச் சாகுபடியையே இவர் கையாளுகிறார்.

முன்னேற்பாடாக நிலக்கடலை அறுவடைக்குப் பின் எக்கருக்கு 18 வண்டி தொழு உரம் இடத் தவறுவ தில்லை.

நாற்றங்காலில் மிக்க கவனம்—

பத்து வண்டி தொழு உரம், ஐந்து வண்டி செம்மண்ணு மிட்டு, சமப்படுத்தி, எட்டு செண்டு சேற்று நாற்றங்கால் தயாரித்தார். 48 ராத்தல் A. S. D. 11 விதையோடு அக்ரசான் மருந்து கலந்து தெளித்தார்.

நல்லமுறையில் நடவு வயல் தயாரிப்பு—

* முன் கூட்டியே தக்கைப் பூண்டு தனிப் பயிராக விதைத்து மடக்கி உழுதார்.

* இரண்டு தடவை இரும்புக் கலப்பையால் உழுது ஐம்பது எருமைகளைக் கொண்டு தொளி கலக்கினார். இம் முறையின் மூலம் நிலம் நல்ல பக்குவப்படுவதுடன், உண் டாகும் களைகளும் தடை செய்யப்படும் என்கிறார்,

* கடை உழவுக்கு முன் எக்கருக்கு நன்கு பொடி செய்த முத்துப் பிண்ணாக்கு ஆறு மூட்டையும் அமோனியம் சல்பேட் இரண்டு மூட்டையும் தெளித்து, மரமும் அடித்தார்.

வரிசை நடவே கையாண்டார்—

* வரிசைக்கு வரிசை ஏழு அங்குலமும் பயிருக்குப் பயிர் நான்கு அங்குலமும் இடைவெளி.

* நடுகைக்கு இரண்டு நாற்றுகள்.

நட்டபின்னும் செய்நேர்த்தி—

* ஒரு மாதத்திற்குப் பின் கை களையெடுப்பு.

* ஆறு ஆட்களைக் கொண்டு 25 படி அமோனியம் சல்பேட் இட்டு, முதல் முறை பயிரின் தூர்களை மிதித்தார்.

* இரண்டாம் முறை தூர் மிதித்தார். களையே காணப் படவில்லையென்றும், பூச்சியோ நோயோ நாடவில்லை என் றும் கூறினார்.

உழைப்பின் வெற்றி—

* எக்கருக்கு 5,760 ராத்தல் நெல்லும், மூன்று வண்டிவைக்கோலும் கிடைத்தது.

* இது இவரது சாதாரண மகசூலை விட இரு மடங் காம்.

* 1962-63-ன் பயிர் விளைச்சல் போட்டியில் கிராமப் பரிசும் பெற்றார்.

* மாநில பயிர் விளைச்சல் போட்டியிலும் கலந்து கொள்ள தீவிர பணியில் ஈடுபட்டுள்ளார்.

உழைப்பிற்கேற்ப ஊதியம்—

	ரூ.ந.பை.
அவருக்குக் கிடைத்த மகசூலின் மதிப்பு	960.00
செய்த சாகுபடி செலவு	413.59
கிடைத்த லாபம்	546.41

எளிதில் எங்கும் கிடைக்கும் இரசாயன உரங்களை உபயோகித்து உற்பத்தியைப் பெருக்குங்கள்

டாடா-பைஸன் அண்ட் ராலீஸ் — 'விஷய ஞானம்' உள்ளவர்கள்!

'ஜனங்களுக்கு நிரூபிக்கவேண்டும்' என்றார் டாடா.

'மேளதாளத்தோடு கூட்டம்போட்டுத்தானே?' என்று கேட்டார் பைஸன் நம்பிக்கையோடு.

'ஆடம்பரம் எதற்கு?' என்று அவரை மட்டம் தட்டினார் ராலீஸ். 'உபயோகமானதாக இருக்கவேண்டும். நமது உரங்களும், பூச்சி மருந்துகளும் மேலும் தரமான, நோய்நொடியற்ற பயிரை எப்படி வளர்த்து, பாதுகாக்கவும் செய்கின்றன என்று நிரூபிக்க வேண்டும்.'

டாடா-பைஸனும் ராலீஸும் தனித்தியங்கிவந்த தங்கள் விற்பனை நிறுவனங்களை இணைத்து ஒரே ஸ்தாபனமாக்கிவிட்டனர். இனி டாடா-பைஸன் தயாரிப்புகள் யாவற்றையும் ராலீஸின் 'ஃபெர்டிலைஸர் அண்ட் பெஸ்டிஸைட்ஸ் டிவிஷன்' விற்பனைக்குக் கொண்டுவரும். இவ்விணைப்பினால் இந்திய விவசாயிக்கு அளப்பரிய நன்மைகள் ஏற்படும். முதன்முறையாக நாடு பூராவும் பயிர் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, பயிர்ப் பாதுகாப்புக்கும் தேவையான ஆலோசனைகளும் தயாரிப்புகளும் இணைக்கப்பட்ட ஒரே ஸ்தாபனத்தின் மூலம் கிட்டப்போகிறது......விவசாய முன்னேற்றத்திற்கு குறிப்பிடத்தக்க சேவை இது என்பதைக் கூறவும் வேண்டுமா?

TATA-FISON RALLIS டாடா-பைஸன் அண்ட் ராலீஸ் பயிர் அபிவிருத்திக்குப் பணி புரிகிறது!



TFRY-3

கரும்பின் தரத்தை உயர்த்தி அதிக லாபம் அடைவீர்

(கோ. ஏகாம்பரம், கரும்பு நுண்ணறிஞர், கடலூர்.)

கரும்பிலிருந்து நமக்கு வேண்டியது சர்க்கரை. ஆகையால் கரும்பு எடை அதிக உற்பத்தி செய்வதின் மேல் நாட்டமிருப்பதுடன், அதன் தரத்தையும் உயர்த்த வேண்டும். கரும்பின் இனிப்பை அல்லது சர்க்கரையை உயர்த்தாமல், எடையை மட்டும் அதிகப்படுத்துவது தானியம் விளைவிக்காமல், பதரை விளைவிப்பது போலாகும்.

கரும்பின் தரமும்—விலையும்

இதுகாறும் கரும்பின் விலை அதன் எடையை பொருத்தே எல்லா ஆலைகளுக்கும் ஒரே சரிசமமாக நிர்ணயிக்கப்பட்டு வந்தது, கரும்பின் தரமோ அல்லது சர்க்கரை உற்பத்தியோ கணக்கிலெடுத்துக்கொள்ளப்பட வில்லை. சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு உற்பத்தி செய்து வழங்கும் விவசாயிகளும், கரும்பின் தரத்தின்மேல் கவனம் செலுத்தாதிருந்தனர். ஆனால் 1962–63-ம் வருஷத்தில், கரும்பின் விலை அந்தந்த ஆலையில் கரும்பி லிருந்து எவ்வளவு சதவிகித சர்க்கரை உற்பத்தி செய்யப் படுகிறதோ அதை ஒட்டி நிர்ணயிக்கப்பட்டிருப்பதை விவசாயிகள் அறிவார்கள். கரும்பு உற்பத்தியாளர்களின் கரும்பின் தரம் உயருமானால் அதற்குத் தகுந்தாற்போல் ஆலையின் சர்க்கரை உற்பத்தி சதவிகிதமும் அதிகமாகும், கரும்பின் விலையும் உயரும்.

மேலும் தனிப்பட்ட நபரின் கரும்பில் எவ்வளவு சர்க்கரையிருக்கிறதென்றும் அல்லது ஒரு ஆலையின் வட்டாரத்தை பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலிருந்து வரும் கரும்பின் தரத்தையும் பரிசீலனை செய்து அதன்படி கரும்பின் விலையை நிர்ணயிக்க ஏற்பாடும் நடந்து வருகிறது.

ஒரு ஆலையின் கரும்பின் சர்க்கரை உற்பத்தி 9·8 சதவிகி தம் இருக்குமானால், கரும்பின் விலை மணங்கு ஒன்றுக்கு ரூ. 1·62 ஆகும், அல்லது குவின்டால் ஒன்றுக்கு 4·20 ஆகும். 9·8 சதவிகித சர்க்கரைக்கு மேல் ஒவ் வொரு 0·1 சதவிகித சர்க்கரை அதிக உற்பத்திக்கு மணங்கு ஒன்றுக்கு $1\frac{1}{2}$ நயாபைசா அதிகமாக விலை கூட்டியும், குறைவான சர்க்கரை உற்பத்திக்கு அதே மாதிரி மணங்கு ஒன்றுக்கு $1\frac{1}{2}$ நயாபைசா விலை குறைத்தும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆகையால் விவசாயிகள் கரும்பின் தரத்தை உயர்த்தினால் அதிக விலை அடைவதற்கு நல்ல வாய்ப்பிருக் கிறது. தரம் குறைந்தால் விலையும் குறைந்துவிடும்.

சில சர்க்கரை ஆலைகளுக்கு சென்ற வருஷம் கரும்பி லிருந்து சர்க்கரை உற்பத்தியான அளவிலிருந்து விலை நிர்ணயிக்கப்பட்டிருப்பதை அடியிற் குறிப்பிடப்பட்டிருக் கிறது.

1962–63-ம் வருஷத்திய கரும்பின் விலை.

சர்க்கரை ஆலை.	கரும்பின் சர்க்கரை சதவிகிதம்.	விலை குவின்டால் ரூ.	மணங்கு. ரூ.
இ. ஐ. டி. ச. பே. நெல்லிக்குப்பம்	9·80	4·34	1·620
டெ. சு. ஆ. புகளூர்.	11·00	4.86	1·815
வடஆற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஆம்பூர்.	10·50	4·62	1·725
காவேரி சுகர்ஸ், பேட்டவாய்த்தலை.	9·90	4·38	1·635
திரு. ஆரூரான் சுக்ர்ஸ், வடபாதி மங்கலம்.	9·70	4·30	1·605
மதுரை சுகர்ஸ், பாண்டியராஜ புரம்.	9·70	4·30	1·605

இதிலிருந்து விவசாயிகள் கரும்பின் மகசூலை உயர்த் துவதுடன், அதன் தரத்தையும் உயர்த்துவதின் முக்கி யத்வம் சொல்லாமலே விளங்கும்.

கரும்பின் தரம் சீதோஷ்ண ஸ்திதி, மண்ணின் சாயல் முதலியவற்றை சார்ந்திருந்தபோதிலும், நல்ல ரகம் குறித்த காலத்தில் அளவான உரம், ஒழுங்கான நீர்ப் பாசனம், கரும்பு விழாமல் தடுத்தல், தகுந்த காலத்தில் நடவும் வெட்டுதல் போன்ற சிறந்த சாகுபடி முறைகளை முறையே அனுசரித்தால், கரும்பின் தரத்தை வெகுவாக உயர்த்த முடியும்.

(1) நல்ல ரகம்.

நம் மாகாணத்தில் கோ. 419 கரும்பு பெரும்பாலும் பயிரிடப்படுகிறது. இது நல்ல மகசூல் கொடுத்தபோதிலும் முன் பட்டத்தில், அதாவது மார்கழி- தை மாதங்களில் ஆடுவதற்கு உகந்ததல்ல. அப்பொழுது இந்த ரகத்தில்

சர்க்கரை சத்து மிகவும் குறைவாயுள்ளது. சென்னை அரசாங்க நிலையங்களில் நடத்திய ஆராய்ச்சியின் விளைவாக கோ. 658 என்ற புதிய ரகம் முன்பட்டத்தில அதிக சர்க்கரை பொருந்தியதும், நல்ல மகசூல் கொடுக்கக்கூடியதுமென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கோ. 658 ரகத்தைப் பயிரிடுவதினால் முன்பட்டத்தில் சர்க்கரை உற்பத்தியை அதிகப்படுத்த முடியும்.

மத்திய, பின்பட்டத்தில் ஆடுவதற்கு கோ. 419 ரகம் உகந்ததாயிருந்தபோதிலும், அப் பட்டங்களில் கோ. 449 ரகம், கோ. 419-ஐ விட அதிக சர்க்கரை சத்து பொருந்தியிருக்கிறது. ஆகவே அப் பட்டங்களில் ஆடுவதற்கு கோ. 449 ரகமே மேன்மையானது. தோட்டக்கால், நீர் வறட்சியுள்ள நிலங்களிலும் கோ. 449, கோ. 419-ஐ விட அதிகப்படியாயும், அல்லது எவ்விதத்திலும் குறைவில்லாத மகசூலும் கொடுக்கக்கூடியது.

1959–62-ம் ஆண்டுகளில் கரும்பு ஆராய்ச்சி பண்ணைகளில் முக்கிய ரகங்களின் மகசூலும், தரமும் பற்றி நடத்திய சோதனைகளின் முடிவு.

ரகம்.	ஒரு எக்கரில்		
	மகசூல் டன்.	சர்க்கரை டன்.	தரம் சத வீதம்.
கோ. 658	44·10	5·58	12·84
கோ. 449	43·52	5·35	12·20
கோ. 419	41·03	4·71	11·24

(2) காலாகாலத்தில் அளவான உரம்.—

யிதன்னூற்காடு மாவட்டத்திலுள்ள மணற்பாங்கான நிலங்களுக்கு எக்கருக்கு 250 ராத்தல் நைட்ரஜனும் (தழைச் சத்தும்), இதர பகுதிகளுக்கு 200 ராத்தல் நைட்ரஜனும் தேவை. மேற்கண்ட நைட்ரஜன் அளவை மூன்றில் இரண்டு பாகம் அல்லது சரிபாகம் ரசாயண உரமாகவும், மிகுதியை பிண்ணுக்காகவும் கொடுக்கலாம். அமோனியம் சல்பேட், சி.எ.என்., யூரியா, பிண்ணுக்கு போன்ற தழைச்சத்து உரங்கள் உபயோகிக்கலாம். இந்த அளவுக்கு மேல் உரமிடுதல் வீணாகும். அதற்கேற்ப போதுமான அளவு அதிக மகசூல் கிடைப்பதில்லை. அளவுக்குமேல் உரமிட்டால் சர்க்கரைச் சத்தும் குறைந்து, நஷ்டத்தையும் விளைவிக்கிறது. போதுமான அளவு உரமிடாவிட்டால், மகசூல் குறைந்து மொத்த சர்க்கரை உற்பத்தி குறைந்துவிடும்.

கொடுக்கப்படும் உரமும் இளம் பயிரிலேயே கொடுக்கப்படவேண்டும். பாதி உரம் கரும்பு நட்ட $1\frac{1}{2}$ மாதத்திலும், மிகுதி உரம் 3-ம் மாதத்திலும் கொடுக்கப்படவேண்டும். சிலர் ஐந்தாவது மாதத்திலும், அதற்கு மேலும் உரமிடுகிறார்கள். காலம் தாமதித்து உரமிட்டால் கரும்பு முதிர்ச்சியடைய நாள்படுவதுடன் சர்க்கரைச் சத்தும் குறைந்து விடுகிறது. உரமும் நன்றாக பயன்படுவதில்லை. ஆகையால் போதுமான உரம் காலாகாலத்தில் கொடுத்தால், நல்ல மகசூல் அடைவதுடன் கரும்பின் தரமும் உயரும்.

(3) கரும்பு சாயாது தடுத்தல்.—

வளர்ந்த கரும்பு சாய்ந்தால் உடைந்து சேதமாவதுடன், கணுக்களில் வேர்கள் ஊன்றி தரமும் குறைகிறது. ஆழமான கிடங்குகளில் நட்டு, மண் அணைக்கும் சமயத்தில் உயரமாகவும் நன்றாகவும் மண் அணைத்தால், கரும்பு சாய்ந்து சேதமடைவதை வெகுவாக தடுக்கலாம். 7—8 மாதங்களில் நல்ல வளர்ச்சியடைந்தபொழுது இரண்டு வரிசைகளை இணைத்து சோகையினால் சங்கிலி போன்று பின்னி கட்டுவதினால் வளர்ந்த கரும்புகளும் கீழே சாயாமல் தடுக்கப்பட்டும் தரம் குறையாதுகொள்ளலாம்.

(4) நீர்ப்பாசனம்—

ஆறு, வாய்க்கால் நீர்பாயும் இடங்களில் கரும்பு வெட்டுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு அதிகமாக நீர்ப் பாய்ச்சி தேக்கம் வைப்பதுண்டு. இம்மாதிரி செய்வதால் கரும்பின் வளர்ச்சி குன்றி தரம் உயருகிறது.

தண்ணீர் குறைவாக இருக்கும் கிணற்று பாசன நிலங்களில், கரும்பு வெட்டுவதற்கு $1\frac{1}{2}$ மாதத்திற்கு முன் தண்ணீர் மிதமாகவும், இடைவெளி நீடித்தும் (இரண்டு மூன்று வாரங்களுக்கொருமுறை) பாய்ச்சினால் கரும்பின் தரத்தை உயர்த்தக்கூடும். வேண்டிய காலத்தில் நீர்ப் பாசனம் மூலம் கரும்பை முதிர்ச்சி செய்வதற்கான பரிசீலனைகளும் நடந்து வருகின்றன.

(5) பயிர் பாதுகாப்பு—

இளங்குருத்துப்புழு, நுனிக்குருத்துப்புழு, தண்டுப்புழு முதலியவைகளால் மகசூல் குறைவதல்லாமல் 6·8 சத விகிதம் தரமும் குறைகிறது. பூச்சி, பூஞ்சண நோய் அணுகாவண்ணம் முன்கூட்டியே தகுந்த தடுப்பு முறைகளும், பரிகாரங்களும் கையாண்டு மகசூலும், தரமும் குறையாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

(6) காலத்தில் நடவும் வெட்டுதலும்—

தமிழ்நாட்டிலிருக்கும் சர்க்கரை ஆலைகள் நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஆரம்பித்து, ஏப்ரல்-மே மாதங்களில் முடிவடைகின்றன. கரும்பு பருவ காலங்களிலே (ஆனியிலிருந்து–கார்த்திகை) நல்ல வளர்ச்சியடைந்து பிறகு குளிர் காலத்தில் வளர்ச்சி குன்றி முதிர்ச்சியடைகின்றது. சாதாரணமாக பிப்ரவரி–மார்ச்சு (தை–மாசி) மாதங்களிலேதான் கரும்பில் அதிக சர்க்கரை பொருந்தியுள்ளது. நல்ல வெல்லம் செய்வதற்கும் இதுவே உகந்த காலம்.

பிழை திருத்தம்

புரட்டாசிமீ இதழில் மூன்றாவது அட்டைப் படத்தில் "ஃப்ரீசியன்" பசுவின்கீழ் 100,14 லீட்டர் என்று இருந்ததை 100,104 என்று வாசிக்கவும்.

மண்ணைக் காப்போரே தன்னைக் காப்போராவர்

பெரும்பாலும் கரும்பு பிப்ரவரி–மார்ச்சு அல்லது ஏப்ரல்-மே மாதங்களில் நடப்பட்டு, 12 மாதங்கள் பொருத்து வெட்டப்படுகிறது. முந்திய பட்டத்தில் வெட்டு வதற்கு, முந்திய பட்டத்திலேயே, அதாவது டிசம்பர், ஜனவரி மாதங்களிலேயே நடவேண்டும். பின்பு நட்டு முன்கூட்டி இளம் வயதிலேயே வெட்டினால் கரும்பின் தரமும், மகசூலும் மிகவும் குறைந்துவிடும். ஆகையால் குறைந்தது 12 மாதக் கரும்பு வெட்டுக்கு வரும்படி அதற்குத் தகுந்தாற்போல், டிசம்பர் மாதத்திலிருந்தே நடவும் செய்யவேண்டும். மே, ஜூன் மாதம் நடும் கரும்பும் ஏப்ரல் மாதத்திலேயே ஆடிவிடவேண்டும். அதற்குப்பின் தரம் குறைந்துவிடும். மறுதாம்பு கரும்பு 11 மாதங்களில் வெட்டலாம்.

கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை முதலிய பிராந்தியங்களில் ஜூலையிலிருந்து செப்டெம்பர் மாதங் களில் நட்டு அதே சமயத்தில் 12 மாதங்கள் பொருத்து வெட்டலாம்.

(7) வெட்டின உடன் ஆலேக்குச் சேர்த்தல்—

கரும்பு வெட்டின உடனே ஆலேக்கு கொண்டுபோய் சேர்ப்பது மிகவும் அவசியம். வெல்லம் செய்வதாக இருந்தாலும் உடனே ஆலேயில் சாறு பிழிந்து வெல்லம் காய்ச்சவேண்டும். ஒரு நாள் கரும்பு வெட்டி, மறுநாள் வண்டி, லாரி, ரயில் மூலமாகவோ ஆலேக்கு கொண்டுபோய் சேர்ப்பது, கரும்பிலிருக்கும் சர்க்கரையைப் பாதித்து, உற்பத்தியும் குறைந்துவிடும். ஆகையால் கரும்பு வெட்டுவதற்குமுன்பே, வெட்டினவுடன் ஆலேக்கு கொண்டுபோய் சேர்ப்பதற்கான ஏற்பாட்டில் கவனம் செலுத்தி, வெட்டின 12 மணி நேரத்திற்குள், ஆலேக்கு கொண்டுபோய் சேர்த்துவிடவேண்டும்.

ஆலேக்கு எல்லோரும் ஒரே சமயத்தில் கரும்பு கொண்டுபோனால் சமாளிப்பது கடினமாகும். கரும்பு எடைபோட்டு ஆலேயிலிட்டு திரும்புவதற்கு அதிக நேரமும் செல்லக்கூடும். அவரவர்களுக்கு குறித்த நேரத்தில் கரும்பு வெட்டிக்கொண்டுபோய் சேர்ப்பது ஒரு ஒழுங்கும் எல்லோருக்கும் நன்மையும் பயப்பதாகும். ஒவ்வொரு பிரிவிலிருந்து வரும் கரும்பின் தரத்தையும் தனித் தனியே நிர்ணயிக்கக்கூடும்.

மேற்கண்ட நல்ல ரகம், தகுந்த காலத்தில் போது மான உரம், பூச்சி பூஞ்சண நோய் அணுகாவண்ணம் காத்தல், கீழே விழாமல் தடுத்தல், முதிரும் பருவத் தில் தகுந்த நீர்ப்பாசனம், குறித்த காலத்தில் நடவும், வெட்டுதலும், காலம் தாழ்த்தாது ஆலேக்கு கொண்டு போய் சேர்த்தல் ஆகிய முறைகளின்மூலம் கரும்பின் தரத்தை வெகுவாக உயர்த்தி அதிக சர்க்கரை உற்பத்தி செய்ய முடியும். கரும்பின் தரத்தை உயர்த்தினால் நமக்கிருக்கும் சர்க்கரை பற்றுக்குறையை பூர்த்திசெய்து கொண்டு, அந்நிய நாடுகளுக்கும் இந்த அரிய சந்தர்ப் பத்தில் சர்க்கரை ஏற்றுமதி செய்து நம் நாட்டிற்கு மிகவும் அத்தியாவசியமாக வேண்டிய அந்நிய நாட்டு செலாவணியை பெருக்கிக்கொள்ளலாம்.

கரும்பின் விலே தரத்தையொட்டி நிர்ணயிக்கப்பட்டிருப் பதால் விவசாயிகளின் பொருளாதாரமும் கணிசமாக உயரும்.

காவேரி மேட்டூர் நீர்ப்பாசன திட்டத்தில் வேர்க்கடலே சாகுபடி

(ஆர். எச். கிருஷ்ணன், டி. எஸ். தித்தாரப்பன்.)

தஞ்சை மாவட்டத்தில், காவேரி நீர்ப்பாசன திட்டத்திற் குட்பட்ட பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, ஒரத்தநாடு முதலிய வட்டாரங்களில் நெல் அறுவடைக்குப் பின் மாசிப் பட்ட நிலக்கடலே விதைக்கப்படுகிறது. தை மாத நடுவில் (ஜனவரி மாதக் கடைசியில்) இந்த நிலக்கடலேயை விதைத் தாலே அதிக விளேச்சல் கிடைக்கிறது. பட்டுக்கோட்டை விவசாய ஆராய்ச்சிப் பண்ணேயில் மாசிப்பட்டக் கடலேக்கு இதுவே சிறந்த விதைப்புக் காலம் என்று 3 ஆண்டு செய்த சோதனேகளினின்றும் தெரிகிறது. இப் பரிசோதனே களில், இவ்வட்டாரத்திற்கு பொருத்தமான டி.எம்.வி. 2 என்ற இனுசை ஜனவரி 31-ம் தேதியிலிருந்து 15 நாட் களுக்கு ஒருமுறை ஆறு தேதிகளில் (அதாவது ஜனவரி 31, பிப்ரவரி 14, பிப்ரவரி 28, மார்ச் 14, மார்ச் 28, ஏப்ரல் 13) விதைத்து ஆராய்ச்சி செய்யப்பட்டது.

விதைப்பு காலங்களில் ஒரு ஏக்கரில் கிடைத்த மகசூல் (ராத்தல்)

	1956	1957	1958	சராசரி.
ஜனவரி 31-ம் தேதி	3,137	3,634	2,196	2,989
பிப்ரவரி 14-ம் தேதி	1,435	2,277	2,088	1,933
பிப்ரவரி 28-ம் தேதி	1,261	2,144	1,746	1,717
மார்ச் 14-ம் தேதி	682	2,093	1,603	1,459
மார்ச் 28-ம் தேதி	406	1,674	1,266	1,115
ஏப்ரல் 13-ம் தேதி	296	1,226	1,031	851

பரிசோதனேயின் முடிவுகள்

1. ஜனவரி மாதம் 31-ம் தேதி விதைப்பே அதிக மகசூலே அளித்தது.

2. பிப்ரவரி 15-ம் தேதிக்குப் பின் விதைத்ததில் மகசூல் படிப்படியாகக் குறைந்தது.

3. விவசாயிகள் தை மாதம் முதல் மாசி மாதம் முழுவதும் விதைக்கின்றனர். இம்மாதிரி காலம் தள்ளி விதைத்ததில் நன்கு முற்றுத கடலேகள் நிறைய இருந் தன.

4. மேலும் பிப்ரவரி மாதம் 15-ந் தேதிக்குப் பின் விதைத்த பாத்திகளில் "டிக்கா" என்ற இலேப்புள்ளி நோயும், "சுருள் பூச்சி" தாக்குதலும் மிகுதியாக இருந்தன.

இக்கடலேக்கு நீர்வசதி கொடுக்கும் கிணறுகளில் மார்ச்சு மாதத்திலிருந்து தண்ணீர் மட்டம் விரைவாக இறங்கி, பயிர் முற்றுவதற்கு முன் குறைந்து விடுகிறது. தண்ணீர் தட்டின்றி பயிர் வளரவும் முந்திய விதைப்பே அனுகூல மாகிறது.

எனவே, தஞ்சை விவசாய பெருமக்கள் எல்லோரும் ஜனவரி மாதக் கடைசியிலேயே கடலே விதைத்து அதிக விளேச்சல் கண்டு பயனடையுமாறு கோரப்படுகின்றனர்.

கொடி எலுமிச்சை

ஆர். பெட்டை கௌடர், சிவ. வெங்கடேசன், (கனி ஆய்வு நிலையம், பெரியகுளம்)

ஒன்றரை ஆண்டுகளிலேயே எலுமிச்சம் பழம் வேண்டுமா ? கொடி எலுமிச்சையைப் பயிரிடுங்கள்.

* கொடி எலுமிச்சை ஏறக்குறைய எலுமிச்சையைப் போன்றே புளிப்பானது.

* எலுமிச்சையைப்போல் சுள்ளி தட்டல் (Wither tip), மரம் பட்டுப் போதல் (Die back), ஆரஞ்சு புற்றுநோய் (citrus canker) முதலிய நோய்களுக்கிலக்காவதில்லை.

* இதில் இரும்புச் சத்து அதிகம்.

எலுமிச்சை, கொடி எலுமிச்சம் பழங்களில் அடங்கியுள்ள சத்து விபரம்

		தண்ணீர்.	புரதம்.	கொழுப்புச் சத்து.	நார்ச் சத்து.
		(சதவிகிதம்.)			
எலுமிச்சை	..	84·6	1·5	1·0	1·3
கொடி எலுமிச்சை	..	85·0	1·0	0 9	1·7

		தாதுச் சத்து.	கார்போஹைட்ரேட்டு.	சுண்ணும்புச் சத்து.	பாஸ்பரஸ்.
		(சத விகிதம்.)			
எலுமிச்சை	..	0·7	10·9	0·09	0 02
கொடி எலுமிச்சை	..	0 3	11·1	0·07	0·01

		இரும்புச் சத்து. சத விகிதம்.	கலோரிகள். சத விகிதம்.
எலுமிச்சை	..	0·3	59
கொடி எலுமிச்சை	..	2·3	57

மேலும் கொடி எலுமிச்சையில் ஏ, பி (B), சி, பி (P), முதலிய வைட்டமின்களும் உள்ளன.

கொடி எலுமிச்சை சாகுபடி

* கடல் மட்டத்திலிருந்து 5,000′ வரையுள்ள இடங்களில் எந்தவித மண்ணிலும் இது நன்கு வளரும்.

* நல்ல வடிகால் வசதியும், 3′ ஆழமுள்ள மண்ணும், அதிக காற்றினின்றும் பாதுகாக்க காற்றுத் தடுக்கிகளும் (Wind break) இதற்குத் தேவை.

* 25′×25′ இடைவெளிவிட்டு 3′×3′×3′ அளவுள்ள குழிகள் தோண்டி நன்கு ஆரப் போடவும்.

* பின்பு தொழு எருவையும் மண்ணையும் கலந்து குழிகளை நிரப்பவும்.

* ஜூலை–ஆகஸ்ட் (ஆடி–ஆவணி) மாதங்களில் பதியம் போட்ட செடிகளை குழிக்கு ஒன்றாக நட்டுத் தண்ணீர் ஊற்றவும்.

உரம்

* ஓராண்டு நிரம்பிய செடிகளுக்கு—

தொழு எரு	..	20	ராத்தல்
சாம்பல்	..	3	,,
சூப்பர்	..	1	,,
பிண்ணுக்கு	..	2	,,

(கறையான் தாக்காதிருக்க பிண்ணுக்குக்கு பதிலாக அமோனியம் சல்பேட் இடலாம்).

* 5 ஆண்டு நிரம்பிய செடிகளுக்கு மேற்கூறிய அளவைப் போன்று இருமடங்கு இடவும்.

* 7–20 ஆண்டு நிரம்பிய செடிகளுக்கு—

தொழு எரு	..	80–100	ராத்தல்
ஆமணக்குப் பிண்ணுக்கு	..	10	,,
அல்லது			
அமோனியம் சல்பேட்	..	2	,,
சூப்பர்	..	3	,,

முதல் ஐந்தாண்டு வரை தழை வளர்ச்சியை ஊக்குவிக்க செடிகளுக்குப் பக்கத்தில் நீளவாட்டத்தில் இரண்டடி ஆழமுள்ள குழிகளை வெட்டி அவற்றில் 80 முதல் 100 ராத்தல பசுந்தழை உரம் போட்டு மூடவும்.

நீர்ப்பாசனம்

செடிகள் நட்டு இரண்டு தண்ணீர்விட்ட பிறகு, கோடையில் வாரமொரு முறையும், மற்ற காலங்களில், மண்ணிற்கும், பருவத்திற்கு மேற்றவாறு 7 முதல் 15 நாட்களுக்கொரு முறையும நீர்ப்பாய்ச்சவும்.

செடிகள் பூக்குங்காலத்திலும், பிஞ்சுண்டாகும் காலத்திலும், உரம் இடும் காலத்திலும், செடிகளுக்குத் தாராளமாகத் தண்ணீர்ப் பாய்ச்சுதல் அவசியம்.

மழைக்காலங்களிலும், மழை முடிந்த பிறகும் செடிகளுக்குக் களையெடுத்தல் நல்லது. உரம் போட்டு நீர்ப் பாய்ச்சு முன்பும் மண்ணைக் கிளறிவிடவும்.

ஊடுபயிர்

முதல் 5 ஆண்டுகளுக்கு ஊடுபயிர் செய்யலாம். இதற்கு ஏற்ற செடிகள :—சணப்பு, கொளிஞ்சி, நரிப் பயறு போன்ற பசுந்தாள் உரச்செடிகள் அல்லது நிலக் கடலை, கொத்தவரை.

கவாத்து செய்தல்

கிளைகளின் நுனியில் காய்கள் உண்டாவதால் பெரும் பாலான கிளைகள் தரையில் வளைந்து கிடக்கும. எனவே,

காய்ப்பதற்கு வேண்டிய கிளைகளைத்தவிர மற்றவைகளை வெட்டிவிடவும். வளர்ந்த மரங்களில் காய்ந்த நீண்ட கிளைகளைக் குறைத்து புதுக்கிளைகள் உண்டாக வசதி செய்யவும். சிறந்த வளர்ச்சிக்கும் காய்ப்புக்கும் ஆண்டு தோறும் செடிகளை சிறிதளவு வெட்டிவிடவும். தரையைத் தொட்டுக்கொண்டிருக்கும் கிளைகளிலுள்ள பழங்கள், அழுகிவிடாமலிருக்க அக்கிளைகளை 'Y' வடிவமுள்ள கவைகளின்மேல் படிய வைக்கவும்.

காய்ப்பு

பதியம் போடப்பட்ட செடிகள் பெரும்பாலும் ஒன்றரை முதல் இரண்டாண்டுகளிலேயே காய்ப்புக்கு வந்துவிடும். 4 முதல் 7 ஆண்டுகளில் நல்ல மகசூல் கொடுக்கும். தென்னிந்தியாவில மே முதல் செப்டம்பர் (வைகாசி–புரட்டாசி) மாதம்வரை அதிக மகசூல் தரும் காலமாகும். சராசரி ஒரு மாதத்திற்கு 600 முதல் 800 காய்கள்வரை கிடைக்கும்.

பயிர்ப் பாதுகாப்பு

* புதுத்தளிர்விட்டு பூததுப பிஞ்சுண்டாகும் காலத்தில், உண்ணப பூச்சிகளையும், பேனையும (Mites, thrips) தடுக்க, நீரில் கரையக்கூடிய கந்தகத்தூளை ராத்தலுக்கு 30 காலன் (75 படி) நீரில் கரைதது தெளிக்கவும.

* துத்தநாகக் குறைவை (Zinc deficiency) நிவர்த்திக்க, துத்தநாக சல்பேட்டை சுண்ணாம்புடன் 2:1 என்ற விகிதத்தில் 100 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

* அசுவிணிகளையும், இலைப் புழுக்களையும் (Aphids, Leaf miners) தடுக்க, ஒரு அவுன்சு பாராத்தியான் 12½ காலன் (30 படி) தண்ணீர் வீதம் கலந்து தெளிக்கவும்.

* நாரத்தைப் புழுக்களை (Citrus caterpillars) கையாலேயே அகற்றிக் கொன்றுவிடுதல நல்லது.

* புற்றுநோயை (Citrus canter) தடுக்க ஒரு சத விகித போர்டோக் கலவையைத் தெளிக்கவும்.

சர்வரோக சஞ்சீவி

செடிகள் பசுமையாகவும் வீரியத்துடனும் வளர்ந்து நல்ல மகசூல் அளிக்க 3 ராத்தல் துததத்தையும், 3 ராத்தல் சுண்ணாம்பையும் கலந்து மயிலைதுததக கலவை தயார் செய்து அதில் கீழ்க்கண்டவற்றை முறையே ஒவ்வொன்றுகக் கலக்கவும்.

துத்தநாகம்	..	5	ராத்தல்
மகனீசியம் சல்பேட்	..	2	,,
மாங்கனீசு சல்பேட்	..	2	,,
போராக்ஸ்	..	1	,,
ஃபெரஸ சல்பேட்	..	2	,,
நீரில் கரையும கந்தகம்	..	5	,,
யூரியா	..	5	,,
சுண்ணாம்பு	..	6	,,

இறுதியில் இந்தக் கலவையில் தண்ணீர் கலந்து 100 காலனுக்குச் செடிகளுக்கு தெளிக்கவும்.

ஒரு ராத்தல் வேப்பம் பிண்ணாக்கை 1–2 காலன் தண்ணீரில் 7–10 நாட்களுக்கு ஊற வைத்துப்பின் வடிகட்டி தெளிந்த நீரை செடிகளுக்குத் தெளித்தால் செடிகள் மேலும் செழித்து வளரும்.

கொடி எலுமிச்சையின் உபயோகம்

பழங்களை 'டீ'யோடும், உணவு வகைகளோடும் சேர்த்து உபயோகப்படுத்தலாம்.

கொடி எலுமிச்சையிலிருந்து தயாரிக்கப்படுபவை

ஊறுகாய்கள், மார்மலேடு (Marmalade), ஷர்பத் போன்ற குளிர்ந்த பானங்கள், சிட்ரிக் அமிலம் (Citric acid), ஜெல்லி செய்வதற்கான பெக்டின் (Pectin), கொடி எலுமிச்சை எண்ணெய் (Lemon oil) முதலியன.

பெரியகுளம் கனி ஆய்வு நிலையத்தில் பயிரிடப்படும் தினுசுகள்

செவிலி, மால்டா, மேயர், நேபாளி ஆப்ளாங், இராஜமுந்திரி, விதையில்லா தினுசு, நேபாளி வட்டம், இதாலியன், லிஸ்பன், வில்லாஃபிராங்கா முதலியன.

இலாபகரமான தினுசுகள்

(1) நேபாளி ஆப்ளாங் (Nēpali oblong).—சிறந்த மகசூல், பழங்கள் ஓரளவு குறைந்த புளிப்புத் தனமை (acidity) உடையவை.

(2) செவிலி (Seville), மால்டா (Malta) தினுசுகள்.—1½ ஆண்டிலேயே காய்ப்பிற்கு வருபவை. பழங்கள் நிறைந்த சாறுடையவை.

(3) விதையில்லா தினுசு.—பழங்கள் குறைந்த புளிப்புத் தன்மையிற் சிறந்து விளங்குகின்றன.

(4) இராஜமுந்திரி.—பழங்கள் எலுமிச்சையைப் போன்ற மணமும், உருவமும் உடையவை.

(5) மேயர் (Meyer).—அதிகச் சாறுடைய பெரிய பழங்கள்.

(6) நேபாளி உருண்டை (Napali round), இதாலியன் (Italian) தினுசுகள்.—வட்டவடிவமுள்ள சாறு நிறைந்த பழங்கள்.

இலாபகரமற்ற தினுசுகள்.—லிஸ்பன், வில்லாஃபிராங்கா.

கொடி எலுமிச்சை வியாபாரத்திற்காக மித சீதோஷ்ணப் பிரதேசங்களிலேயே பெருவாரியாகப் பயிரிடப்படுகிறது. நம்நாட்டில் தற்சமயம் மத்தியபிரதேசம், பம்பாய், தமிழ்நாடு, மைசூர், ஆந்திரா, அஸ்ஸாம், பஞ்சாப் முதலியமாநிலங்களில்குறைந்த அளவிலேயே பயிராகிறது. நீங்களும் ஏன் இதைப் பயிர் செயயக்கூடாது ?

புதிய பழத்தோட்டங்கள் அமைக்க அரசினர் கடன் வசதியைப் பயன்படுத்துங்கள்

மாருத் சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயம்புத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினுல் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் எற்றுக்கொண்டதும்

(No. C. 1206691/61—14—4—1962)

(சென்னை விவசாய டைரக்டர் கடிதம் No. C. 163213/62—7-7-1962 மூலம்
காண்ட்ராக்ட் விகிதத்தில் உட்பட்டது)

குணங்கள்



1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்லில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தகட்டினுல் செய்யப் பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாது காப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c.m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் கூட்ஸ் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.

விலை விவரம்



(சென்னை அரசாங்கம் விதித்த காண்ட்ராக்ட் விலை)

18 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	290	ரூபாய்
14 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	280	ரூபாய்
மாருத் சார்ஜ் பம்பு	280	ரூபாய்

செயலாளர்கள்

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் வர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள்

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,

93, ஸ்ரீநரசிங்க ராஜா ரோடு, பெங்களூர்.

தஞ்சை மாவட்டத்தில் தாளடி நெற்பயிரும் குருத்துப் பூச்சியும்

[P. R. நாகராஜராவ், G. வரதராஜன், B. வேலாயுதம் (நெற்பயிர்ப்பூச்சி ஆராய்ச்சி அனுவலகம், ஆடுதுறை).]

தஞ்சை மாவட்டத்தில் நெல் மூன்று பருவமாகப் பயிரிடப்படுகிறது. அவை குறுவை, சம்பா, தாளடியாகும். குறுவை ஜூன்—ஜூலையில் விதை விடப்பட்டு, ஆகஸ்டு, செப்டம்பரில் அறுவடையாகும். சம்பா, ஜூலை-ஆகஸ்டில் விதை விடப்பட்டு, டிசம்பர்-ஜனவரியில் அறுவடையாகும். தாளடி செப்டம்பரில் விதை விடப்பட்டு பிப்ரவரி-மார்ச் மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. இம் மூன்று பருவங்களில், சம்பா சாகுபடி ஏறக்குறைய 3-ல் 2 பங்கு ஆகும். குறுவை அறுவடையானதும் அதே வயல்களில் தாளடிப் பயிர் நடப்படுகிறது. இங்ஙனம் மூன்று காலங்களில் பயிராகப்படும் நெல் பயிரில் தாளடிப் பயிரே குருத்துப் பூச்சியின் (Rice stem borer) தாக்குதலுக்கு அதிக அளவில் இலக்காகிறது.

இப்பூச்சியின் தாக்குதலால் தாக்கப்பட்ட தூரின் (Tiller) குருத்து அழுகிக் காய்ந்துவிடுகிறது. மேலும் கதிர் வாங்கிய உடன் தாக்கப்பட்டால் கதிர் சவலையாக (கருக்காவாக) மாறிவிடுகிறது. இவ்வாறு இப்பூச்சியினுல் ஏற்படும் நஷ்டம், ஒவ்வொரு ஆண்டும் 10 சத வீதமும் அதற்கு மேலும் என்றும் கணக்கிட்டுள்ளனர்.

இப்பூச்சியின் தாக்குதல், குறுவையில் அதிகமாகக் காணப்படுவதில்லை. அறுவடையின் போது ஒரு சத வீதம் அல்லது அதற்குக் குறைவாகவே, காணப்படுகிறது. சம்பாவில் இதன் தாக்குதல் அதிகரிக்கிறது. ஆயினும் தாளடியில் உச்ச கட்டத்திற்போய் நிற்கிறது, 16 சத வீதம் வரையில் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் யாதெனில், குருத்துப்பூச்சியான விட்டில் பூச்சி (Schoenobius incertulas wek)கள், அக்டோபர் மாதத்தில் தோன்ற ஆரம்பித்து, கொஞ்சம், கொஞ்சமாக, அதிக அளவில் தோன்றி, நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏராளமாகக் காணப்படுகின்றன. அதில் உச்ச கட்டம் டிசம்பரேயாகும். இவ்வாறு குறிப்பிட்ட இரண்டு மாதங்களில் இப்பூச்சி அதிகமாக உற்பத்தியாவதற்குக் காரணம் கால நிலையும் (Weather factors), இதன் ஒரே உணவான நெற்பயிர் ஏராளமாகக் கிடைப்பதும் ஆகும். பின் ஜனவரி பிப்ரவரி ஆகிய மாதங்களில் இப்பூச்சியின் உற்பத்திக் குறைந்து ஏப்ரல், மே மாதங்களில் அதிகமாகக் காணப்படுவதில்லை.

இப்பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு, தாளடிபயிரில் அக்டோபர் மாதத்தில் பூச்சிகள் அதிகமாகக் காணப்பட்ட போது நாற்றங்காலில் ஒருமுறை மருந்தடிக்கப்பட்டது. பின் பயிரில், டிசம்பரில் 14-ம் தேதியன்று நிறைய பூச்சிகள் கண்டபோது ஒரு முறை அடிக்கப்பட்டது. மேலும் ஆறு நாட்கள் கழித்து, 20-ம் தேதியன்று ஒரு முறை அடிக்கப்பட்டது. இவ்வாறு இரண்டாவது முறை அடித்ததின் காரணம், முதலில் தோன்றிய பூச்சிகள் முட்டையிட்டு இருந்தால், அவற்றினின்று வரும் புழுக்கள், கொல்லப் படுவதற்காகவே ஆகும். ஒரு ஏக்கருக்கு, 359 பவுண்டிலிருந்து 644 பவுண்டு வரையில் அதிக விளைவு கிடைத்தது. இங்ஙனம் நல்ல பலனையடைய வேண்டுமானுல் பயிர்களுக்கு தக்க காலங்களில் மருந்தடிப்பதே சாலச் சிறந்த வழியாகும். மேலும் விட்டில் பூச்சிகள் திடீரென வயலில் அதிகமாகக் காணப்பட்டால் உடனே மருந்தடிக்க வேண்டும். சாதாரணமாக தஞ்சை ஜில்லாவில் தாளடியில், வெள்ளைச் சிறுமணியோ (Adt. 25), கோயம்புத்தூர் வெள்ளைச் சம்பாவோ (Co. 25) போடப்பட்டு அக்டோபர் முதலில் நடப்பட்டிருந்தால், நவம்பர் மாதத்தில் ஒரு முறை மருந்தடிக்க நேரிடும். தாமதித்து நடப்பட்டிருந்தால், ஜனவரியில் ஒரு முறை அதிகமாக மருந்தடிக்க வேண்டும். இவ்வாறு, உரிய காலத்தில் மருந்தடித்து விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

மிகச் சிறந்த உயர்தர ஜாதி நல்ல மகசூல் தரும்
உள்நாட்டு, வெளி நாட்டு

காய்கறி விதைகள்

திடமான நம்பிக்கை வாய்ந்த உண்மை ஜாதி

ஒட்டு மாஞ்செடிகள்

எலுமிச்சை, சாத்துக்குடி முதலிய

பலவிதப் பழச் செடிகள்

புஷ்ப விதை, செடிகள், பூச்சிநோய் மருந்துக்கள்
கோரையையும் அடியோடு அழிக்கும்

களை நாசினி

கிடைக்குமிடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

2, டாக்டர் சிங்காரவேலு தெரு

தியாகராயநகர் சென்னை—17

Grams : RAJSEED. — Phone : 42262.

திராட்சையில் காணும் பூசண நோய்களும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்

[சி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பி.எஸ்சி., (வேளாண்மை), கா. சிவப்பிரகாசம், பி. எஸ்சி., (வேளாண்மை), ச. பத்மனபன், எம்.எஸ்சி., பூசண இயற் பிரிவு, வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சிக் கழகம், கோவை-3.]

நமது மாகாணத்தில், திராட்சை சாகுபடி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அனப்-இ-சாகி போன்ற திராட்சை வகைகள் எல்லோருடைய கவனத்தையும்



சாம்பல் நோய்

ஈர்க்கும் சிறப்புப் பெற்றிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் திராட்சை வியாபார அளவில் மிகுதியாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அரசாங்கத்தினரும் திராட்சை சாகுபடியில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். பழச்சாகுபடியில் முழுப்பலனையும் பெற்று, அதிக வருமானத்தை அடையவேண்டுமாயின் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

திராட்சையில் காணும் பூசண நோய்களில் சாம்பல் நோய், செவ்வட்டை நோய், பறவைக்கண் நோய் முதலானவை முக்கியமானவையாகும்.

1. சாம்பல் நோய் (Powdery mildew)

* இளந்தளிர்களிலும் இலைகளிலும் பூங்கொத்துக்களிலும் பழங்களிலும் உள்ள வெண்மையான பொடி போன்ற படிவினால் இந் நோயிருப்பதைக் கண்டறியலாம்.

* இப் பூசணம் இலைகளின் இருபுறமும் காணப்படும்.

* இலைகள் முழுவளர்ச்சியையும் அடைய இயலாது.

* திராட்சை செடி வாடிய தோற்றத்துடன் வளர்ச்சி குன்றித் தென்படும்.

* இப் பூசணத்தின் தாக்குதல் முற்பகுதியில் ஏற்பட்டால் பூக்களில் பிஞ்சு தோன்றாது. தோன்றிய பிஞ்சுகளும் உதிர்ந்து விடுகின்றன.

* பிற்பகுதியாயின் பழங்கள் வெடித்து அழுகி விடுவதுடன் கடினமாகி புளிப்பான சுவையுடையதாகவும் மாறிவிடுகின்றன.

தடுப்பு முறை : நன்கு அரைக்கப்பட்ட கந்தகத் தூளைத் தூவ வேண்டும்.

2. செவ்வட்டை நோய் (Downy mildew)

* இந் நோயினை உண்டாக்கும் பூசணம் இலைகளில் ஒரு புறத்தில் மட்டும் காணப்படும்.

* இலை, பூ, பிஞ்சு முதலானவைகள் இதனால் தாக்கப்படுகின்றன. இலைகளில்தான் இந்நோய் அதிகம் காணும்.

* இந் நோய் ஒழுங்கற்ற வடிவமுள்ள புள்ளிகளை இலைகளில் உண்டாக்குகிறது.

* நோயின் கடுமைக்குத் தக்கவாறு புள்ளிகள் பெரிதாகவோ சிறிதாகவோ இருக்கின்றன.



செவ்வட்டை நோய்

* இலைகளின் அடிப்பாகத்தில் இப் புள்ளிகளுக்கு நேராக இப் பூசணத்தின் மென்மையான வளர்ச்சியைக் காணலாம்.

* இறுதியில் இலைகள் காய்ந்து விடுகின்றன.

தந்தையைப்போல் தனயன்...

ஆம், சில விஷயங்களில்தான்...முக்கியமான வேற்றுமையோ? ஆமாம்! ராமன் தன் தந்தையைப்போல் ஒரு விவசாயியாகத்தான் இருப்பான். ஆனால் அவன் நிலத்தை உழுது பயிரிடும் விதமே வேறுதான். தரத்திலுயர்ந்த விதைகளையே விதைப்பான். விஞ்ஞான ரீதியில் மாற்றி மாற்றிப் பயிரிடுவான். நீர்ப்பாசன வசதிகளை நன்கு பயன்படுத்துவான். ராலீஸ் தயாரிப்பதுபோன்ற சமநிலை உரக்கலவைகளைக்கொண்டு தனது நிலங்களை வளப்படுத்துவான். ராலீஸ் தயாரிக்கும் "மரம்மார்க்" உரங்கள் இந்திய விவசாயிகளுக்குத் தரமான, வளமான விளைச்சலை அளிக்கின்றன. ராலீஸ் உரங்களில் முதலீடு செய்யப்படும் 1 ரூபாய், 4 ரூபாய் அதிகப்படி விளைச்சலைத் தருகிறது.

RALLIS TREE BRAND FERTILIZERS

ராலீஸ் இந்தியா லிட்.

இந்தியா முழுவதும்

GY-29 TAM

* நோய்ப்பட்ட பூங்கொத்தில் பூசணத்தின் மென்மையான வளர்ச்சி தென்பட்டு நாளடைவில் பூங்கொத்தும் காய்ந்துவிடும்.

* பிஞ்சுகள் வெடித்து அழுகிவிடுகின்றன.

* பழங்கள் சுருங்கி கடினமாகி விடுகின்றன.

* தொடர்ந்த ஈரமான கால நிலையும் கதகதப்பான கால நிலையும் இந்நோய் அதிகமாகப் பரவ உதவுகின்றன.

தடுப்பு முறை : ஒரு சதவிகித போர்டோ கலவையை கத்தரிப்பு (Pruning) முடிந்தவுடன் ஒரு முறையும், தார் குருத்து வளர்ந்துவரும் சமயத்தில் ஒரு முறையும், காய் பிடிப்பின்போது ஒரு முறையும் பின்பு 15 நாட்களுக்கு ஒரு முறையும் தெளிக்கவேண்டும். காய்கள் முற்றும்வரை மருந்தடித்தல் சிறப்பானது.

3. பறவைக்கண் நோய் (Anthracnose)

திராட்சை பயிராகும் இடங்கள் எங்கும் இந் நோய் காணப்படும்.

* இப் பூசணம் கிளைகளையும் இலைகளையும் பழங்களையும் தாக்குகிறது.

* பழங்களில் மிகுதியான சேதத்தினை ஏற்படுத்துகிறது.

* கிளைகளில் சொறிபோன்ற கொப்பளங்களும், இலைகளிலும் பழங்களிலும் புள்ளிகளும் காணப்படுகின்றன.

* சில சமயங்களில் இலை முழுவதும் கெட்டுவிடும்.

* ஆரம்பத்தில் பழங்களில் காணப்படும் புள்ளிகள் பறவைக்கண் வடிவத்தை ஒத்திருக்கின்றன.

* பழம் நாளடைவில் சுருங்கிவிடும்.



பறவைக் கண் நோய்

* மிகுதியான தாக்குதலாயின் பழக் கொத்திலுள்ள பழங்கள் யாவுமே சேதத்திற்குள்ளாகி வீணுகின்றன.

தடுப்பு முறை : ஐந்து ராத்தல் பெர்ரஸ் சல்பேட்டையும் (Ferrous sulphate) அரை பைண்ட் அடர் கந்தக அமிலத்தையும் ஒரு காலன் தண்ணீரில் கலந்து கத்தரிப்பு செய்தவுடன் கிளைகளில் தடவவேண்டும். 10 நாட்கள் கழித்து ஒரு சதவிகித போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும். 50 சத தாமிரக்கலவை மருந்து ஒரு இராத்தலை 40 காலன் தண்ணீரில் கலந்து அடித்தலும் சிறந்தது.

வளமான திட்டம்

(மண் வளப் பாதுகாப்புத் திட்டம்)

[க. லெட்சுமணன், துணை உதவியாளர், உதவி வேளாண்மைப் பொறியாளர் அலுவலகம், கோவை-2.]

காட்சி 1

இடம் : பண்ணையார் வீடு.

நேரம் : காலை 10 மணி.

பாத்திரங்கள் : (1) பாண்டியன் (2) சமீன்தார் சிவ பாண்டியன் (3) முத்தையா.

பாண்டியன் : ஐயா! வணக்கங்க, என்ன நம்ம வீட்டில் எல்லாரும் நலந்தானே ?

சிவபாண்டியன் : என்ன தம்பி ? ஆண்டவன் கிருபை யாலும் உம்ம தயவாலும் நல்ல சேமந்தான். ஆனாலும் நிம்மதியில்லேப்பா.

பாண்டியன் : (மனதிற்குள் ஒன்றும் புரியலையே அட கட வுளே) ஐயா! தயவு செய்து விசயத்தைச் சொல்லுங்கோ! முடிந்தளவு தீர்த்து வைக்கிறேன். யாராலும் தீர்த்து வைக்க முடியாது என்று மட்டும் சொல்லாதிங்க; முயற்சித்தால் நிச்சயம் பலன் உண்டுங்க! (இச்சமயம் முத்தையா ஓடி வருகிறான். முத்தையா வருவதைப் பார்த்த பாண்டியன் சமீன்தார் சிவபாண்டியனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றார். முத்தையாவும் பாண்டியனும் சந்திக்கின்றனர்.)

காட்சி 2

இடம் : முத்தையா வீட்டுத் தோட்டம்.

பாத்திரங்கள் : முத்தையா, பாண்டியன்.

முத்தையா : டேய் தம்பி பாண்டியா! இன்னைக்கு காலையிலே உன்னைத்தேடி ஒரு ஜீப்காரு வந்ததுடா! அதிலிருந்தவுங்க உன்னையும் அப்புறம் பெரியவங் களையும் பார்க்கனும்னு சொன்னாங்க! உன்னைக் காணோம். அப்புறம் அவங்க உன்னுடைய சிறு மலைக்காடு பக்கம் போனாங்கோ.

பாண்டியன் : ஓஹோ! அப்படியா! அவர்களெல் லாம் உனக்கு யாருன்னு தெரியுமாண்ணே ?

முத் : தெரிஞ்சுக்கிட்டா, எண்டாப்பா ? உன்னையிட்டே கேட்கிறேன். கொஞ்சம் சொல்லப்பா தம்பி!

பாண் : அதுதான் கவர்மெண்டிலே இருந்து புஞ்சைக் காடுகளிலே வரப்பு போடுறாங்களே! அவுங்கதான். அவுங்கதான் வந்திட்டு போனாங்க! நான் கூட என் சிறுமலைக்காட்டிலே பார்த்து பேசிவிட்டு வந்தேன்.

முத் : காட்டிலே வரப்பு போடுரதாக்கும்! இதென்னப்பா புதுசா இருக்கு வரப்பு போடக்கூடகவர்மெண்டாக்கும்! வேடிக்கையாத்தானப்பா இருக்கு!

பாண் :—அண்ணே! உண்மையிலே உனக்கும் நம்ம ஊருக்கும் புதுசுதான். ஆனால் நம்ம ராஜ்ஜியத்திற்கு இது பழையதுதான், பல இடங்களில் இப்பக்கூட நடந்துக்கிட்டு இருக்குது. இன்னமும் நிறைய நடக் கப் போகுது.

முத் : அப்படியா! அப்ப இதிலே ஏதோ விசயம் இருக்குன்னு சொல்லு!

பாண் : சொல்றேன் அண்ணே! ஆமா! நம்ம ஔவை பாட்டிகூட "வரப்பு உயர நீர் உயரும்" என்று சொல்லியிருக்காங்க. நாடும் செழிப்பாயிருந்தது. மக்களும் நன்றாக வாழ்ந்தனராம். காலம் ஆக ஆக முன்னால் இருந்த நிலை மாறி நம் முன்னோர் கவனிக்காத காரணத்தால் பூமிகளில் சேதமேற்பட்டு விளைச்சல் குன்றி நாட்டின் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டுவிட்டதாம். நம்ம சுதந்திரம் அடைந்த பிறகு, நமது அரசாங்கம் இப்பொழுது அந்த ஔவை பாட்டி சொன்னதை நிறைவேற்ற வந்திருக்குதுங்க! புரிந்ததா ?

முத் : என்னப்பா, ஔவை வரப்பு பாட்டு பாடுச்சுங்கிற, கவர்மண்ட் ஔவைபாட்டி சொன்னதை நிறை வேற்றப் போகிறாங்கங்கிற, அப்படியின்னா வரப்பு போடப் போகிறாங்கன்னு சொல்லுற! அப்படித் தானே ?

பாண் : கொஞ்சம் தயவுசெய்து பொருமையாகக் கேளுங்க. இந்த பூமியிலுள்ள மண்ணெல்லாம் மழையாலும் காற்றாலும் பல சீதோஷ்ண நிலைகளில் தாக்கப்பட்ட பாறைகளாலே ஆனதாம். இப்படியான மேல் மண்ணில்தான் பயிர்கள் வளர்வதற்கேற்ற சக்திப் பொருட்கள் இருக்கின் றனவாம். அதனால்தான் நாம் கூட மேல் மண்ணில் விவசாயம் செய்கிறோம். நாம் விவசாயம் செய்ய ஈரம் வேண்டும். ஈரம் இருந்தால் தான் நல்ல விளைச்சல் விளையும் என்பது உங்களுக்கு தெரியும். ஏனெனில் உங்கள் நஞ்சை நிலத்துக் கெல்லாம் அடிக்கடி தண்ணீர் பாய்ச்சறீங்க. இந்த ஈரத்தையும், பாதுகாக்க நீங்க நஞ்சை நிலத்தில் வரப்பு போட்டிருக்கிறீங்க. இதைப் போல உங்கள் புஞ்சைக் காட்டிலும் வரப்பிட்டால்தான் பெய்த மழையினால் கிடைத்த தண்ணீர் தேங்கி ஈரம் கொடுத்து விவசாயப் பலன் கிடைக்கும். வரப் புகள் இல்லாவிட்டால் நீங்கள் போட்ட எரு, விதை, மேல் மண் இவையெல்லாம் மழை பெய்தவுடன் தண்ணீருடன் சேர்ந்து போய்விடுகிறது. இப்படியே போடாத பல பேர்களுடைய நிலங்களிலிருந்து அரித்துச் செல்லப்பட்ட மண்ணும் தண்ணீரும் ஒன்று சேர்ந்து நதிகளின் போக்கை மாற்றி, வழியினுள்ள

கிராமங்களையும், நகரங்களையும், பயிர்களையும், மக்களையும் அழித்து நாசமடையச் செய்திருக்கிறது. நஞ்சை நிலங்களுக்காகவும், மின்சார உற்பத்திக்காகவும் கட்டப்பட்ட அணைகளை மேடாக்கி தூர்த்து நாளடைவில் இதன் மூலம் பயிர்களின் விளைச்சல் குறைவதோடல்லாமல் தொழிற்சாலைகளின் வேலையையும் நாசமடையச் செய்கிறது. இந்த மாதிரி ஏற்பட்டு நம் நாட்டின் பொருளாதார நிலை பாதிக்காமலும் நாமும் நாலுபேரைப்போல் நல்லா வாழவும் முதன் முதலில் இந்த வேலையைத்தான் நாம் செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியுது.

முத் : ஆமாம் தம்பீ, நீ சொல்றது வாஸ்தவம்தான்.

பாண் : அப்போ சீக்கிரமா தெரிஞ்சுக்கிட்டேன்னு சொல்லுங்க.

முத் : ஆமாம்பா ! நம்ம நிலத்திலே நம்ம வரப்பு போடுறோம். இதேமாதிரி ஒவ்வொருவரும் அவங்கவுங்க காட்டிலே செய்துகிட்டா நமக்கு வேண்டிய நீர் போக மீதம் சேதமில்லாமல் போகும். நீர்த் தேக்கங்களிலே போயும் சேரும். அப்போ விளைச்சலும் உயரும். செழிப்பும் ஏற்படும் அப்படித்தானே ?

பாண் : உங்க மாதிரி புரிஞ்சவங்க, வசதியுள்ளவங்க தனித்தனியாக வரப்புப் போட்டுவிடலாம். ஆனால் ஏழைகள் போட முடியாதல்லவா!

முத் : அப்படின்னு! எல்லாரும் வரப்புப் போடக்கூடிய அளவிற்கு ஒன்னும் வழி இல்லையா ?

பாண் : இருக்கு அண்ணே, இருக்கு ! அதுக்குத்தானே அரசாங்கம் விவசாயிகள் வாழனும்னு பல நன்மைகள் செஞ்சுகிட்டு வருது.

முத் : அப்படியின்னு வரப்பு போடுறது எப்படி ? எப்படிப்பட்ட இடத்திலே ? அதற்கு நாம் என்னதான் செய்யனம்னு எல்லாவற்றையும் சொல்லிடு தம்பி.

(இச் சமயம ஜீப் ஊருக்குள் வருகிறது)

முத் : ஜீப்கூட வருது.

பாண் : ஆமாம், எல்லா விவரமும் அவங்க சொல்லுவாங்க. வாங்க போகலாம்.

காட்சி 3

இடம்: மந்தைத்திடல்.

பாத்திரங்கள் : பாண்டியன், முத்தையா, அரசாங்க அலுவலர்

பாண்டியன் முத்தையா : (இருவரும்) வணக்கமுங்க, அய்யா

அரசாங்க அலுவலர் : வணக்கம் மிக்க வணக்கம்.

பாண் : ஐயா தயவுசெய்து எங்க ஊரிலே, வரப்பு போடுறது பற்றி தாங்கள் முதலிலே எங்கள் முத்தையா அண்ணனுக்கு கொஞ்சம் சொல்லுங்கோ.

அரசாங்க அலுவலர் ; கொஞ்சம் என்னங்க ? உங்களுக்கு நன்மை செய்யத்தானே நாங்கள் வருகிறோம்.

முத் : எல்லாத்தையும் தம்பி சொல்லிடுச்சுங்க. நீங்க அது எப்படி போடுறது அதுக்கு நாங்க என்ன செய்ய வேணும்னு சொன்னு போதும்.

அரசாங்க அலுவலர் : இதற்கு நீங்கள் உங்கள் கிராமத்தைப் பொருத்தவரை எங்கள் உதவியாளர்கள் வரும் சமயம் அவர்களிடம் உங்களுடைய காடுகளுக்கு வரப்பு போட ரூ. 1–50 பத்திரத்தில் கையொப்பம் இட்டு சம்மதம் தெரிவிக்க வேண்டும். இதைப் பெற்றவுடன் உங்களுடைய காட்டின் சரிவிற்கு தகுந்தாற்போல் சம உயர வரப்புகள் முறைப்படி எங்கள் உதவியாளர்களின் உதவியின் பேரில் வேலையாட்களால் வரப்பு போட்டுக் கொடுக்கப்படும்.

முத் : இதிலே வேறு ஏதாகிலும் நன்மையுண்டுங்களா ?

அரசாங்க அலுவலர் :—உண்டு. அரசாங்கத்தார் வரப்பு போட்டவுடன் செலவு செய்த மொத்த தொகையில் 100–க்கு 25 பங்கை மானியமாக விட்டு விட்டு மீதம் 75 பங்கை உங்களிடமிருந்தே வரப்பு போட்டு இரண்டு வருடங்கள் கழித்து 15 அல்லது 20 வருடத் தவணையில் வசூலிப்பார்கள்.

முத் : அப்படின்னு! இதனாலே எங்ககிட்டே மொத்த பணத்தையும் வாங்க மாட்டீங்க, அப்படித்தானேங்க !

அரசாங்க அலுவலர் : ஆமாங்க, இன்னும் கொஞ்சம் கேளுங்க. வரப்பு போட்டவுடன் நீங்கள் விதைத்து கடைசியாக உழும் பொழுது சரிவிற்கு குறுக்கே உழ வேண்டும். விதைகள் விதைக்கும் போதும் இம் முறையைக் கையாளலாம். மேலும் பயிர்களை மாற்றி மாற்றி பயிரிடுவது, பல பயிர்களை கலந்து விதைப்பது போன்ற முறைகளையும் பின்பற்றலாம். வரப்புகளை போட்டவுடன் சும்மா இருக்காமல் புல் விதைகளையோ, கொட்டைமுத்து (ஆமணக்கு) விதைகளையோ வரப்பில் போட்டு வளர்த்து சேதமடையாமல் செய்யலாம்.

முத் : ரொம்ப சந்தோசங்க, ஔவை பாட்டி கூட எதுக்கு பாடி வைச்சுருக்கிருங்கன்னு தெரிஞ்சுக்கிட்டேன் தம்பி, நன்றாகத்தான் பாடி வைச்சிருக்கிருங்க! அப்ப இனிமே நாம முதலிலே மண்ணை பாதுகாத்துத்தான் மற்றவைகளைப் பாதுகாக்கனும் இல்லேங்களா ! அப்ப இதுதான் அஸ்திவாரம். ஏனுங்க, அப்படித்தானே ?

அராசங்க அலுவலர் : ஆமா, மண்ணை நம்பித்தானே இந்த உலகமே இருக்குது !

முத் : எனக்குகூட ஞாபகம் வருதுங்க "மண்ணை நம்பி மரம் இருக்கு.........." என்ற பாட்டின் அர்த்தம். பாண்டியன் சொன்னது நூத்துக்கு நூறு உண்மையிங்க.

அரசாங்க அலுவலர் : அவர்தான் இந்த திட்டம் கூட உங்களுக்கு கொண்டுவர முயற்சி செய்தவர். அதனாலே அவரைப் பார்த்து விட்டு வரப்பு போட ஆரம்பிக்கலாம் என்று நினைத்தோம்.

முத் :—பாண்டியா ! அப்ப உன்னாலே இனிமேல் நம்ப ஊரே புதுமையாகப் போகுது, அப்படித்தானே சொல்லுடா ?

(இச்சமயம் சிவபாண்டியன் வந்து சேருகிறார்.)

காட்சி 4

இடம் : மந்தைத்திடல்

பாத்திரங்கள் : சிவபாண்டியன் (சமீன்தார்), பாண்டியன் அரசாங்க ஊழியர், கிராம மக்கள்.

(சிவபாண்டியன், பாண்டியனிடம் விஷயத்தைக் கேட்க பாண்டியன் எடுத்துரைக்கின்றார்).

சிவபாண்டியன் :—தம்பி பாண்டியா, அன்னைக்கு, உன்னுடைய பேச்சைக் கேட்கமாட்டேன்னேன். இன்னைக்குத்தான் தம்பி தெரியுது ! அன்னைக்கு என்னுடைய 150 ஏக்கரில் உள்ள சோளம் பால் கூடப் பிடிக்காமல் எல்லாம் அப்படியே பட்டுப்போச்சு. ஆனால் பக்கத்து வீட்டுக்கார பச்சைமுத்துவினுடைய $1\frac{1}{2}$ ஏக்கராவில் உள்ள சோளமும் தட்டப் பயறும் நல்லா விளைஞ்சட்டது. இனிமேல் நான் என்ன செய்யறதுங்கிறதை நீதான் எனக்குச் சொல்லணும்.

பாண்டியன் :—கவலைப்படாதீங்க, இனிமேல் நல்ல காலம் வந்துவிட்டது. அது விளையாமல் போனதற்குக் காரணம் 15 நாட்களுக்கு முன் பெய்த மழையால் பெறப்பட்ட தண்ணீர் தேங்கி ஈரம் கிடைத்திருந்தால் விளைந்திருக்கும், ஈரம் இல்லாமல் போனதற்குக் காரணம் உங்கள் காடோ சரிவுள்ளது, அதிலும் கொஞ்சம்கூட வரப்பும் இல்லை. ஆனால் அடுத்த வீட்டுக்காரருடைய காட்டிலோ வரப்பிருக்கிறது. இதனால் 15 நாட்களுக்கு முன் பெய்த மழையினால் கிடைத்த தண்ணீரின் பலனைப் பெற்று அட்டயிர் விளைந்திருக்கிறது. இந்த மாதிரி நிலை இனிமேல் ஏற்படாமல் இருக்க அரசாங்கத்தார் நமது கிராமத்தை நோக்கி மண் அரிப்பைத் தடுக்கவும் வளத்தைக் காக்கவும் திட்டம் கொண்டுவந்திட்டாங்க.

சிவபாண்டியன் :—அப்படியா ! அப்ப நம்ம ஊரிலே உள்ள காட்டிலே வரப்பு போட்டு நீர் வளத்தையும் நில வளத்தையும் பாதுகாத்து நிலத்திலே நல்ல விளைச்சல் காணவேண்டும். அதற்குத்தான் இவுங்கவெல்லாம் வந்திருக்கிறாங்களா.

பாண் :—ஆமா, எல்லாம் நம்ம அரசாங்கத்து அலுவலர்கள்தான். நமக்கு நன்மை செய்ய வந்திருக்கிறாங்க.

சிவபாண்டியன் :—ஐயா, நாங்கள் எங்களது பூரண ஒத்துழைப்பையும் தருகிறோம். எங்கள் கிராமத்தை நல்ல முறையில் முன்னேறச் செய்யுங்கள்.

அரசாங்க அலுவலர் :—உங்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் நம அரசாங்கத்தின் திட்டங்கள் அனைத்துமே வெற்றி பெறும். அப்போ, நாங்கள் வருகிறோம். எல்லாரும் நல்ல முறையில் இந்த மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தைப் புரிந்து கொண்டிருக்கின்றீர்கள் என்று தெரிகிறது. வணக்கம், போய் வருகிறோம்.

சிவபாண்டியன், பாண்டியன், மக்கள் அனைவரும் வணக்கம் செலுத்துகின்றனர். ஜீப் நகருகிறது.

முற்றும்.

பாசிப் பயறில் பொறுக்கு விதை கோ. 1.

(பயறு வகை ஆராய்ச்சி நிபுணர் கோவை.)

* நாட்டு ரகங்களைவிட 25 சதவீதம் அதிக விளைச்சல்.
* மானாவாரிப் பயிர்.
* வயது 135 நாட்கள்.
* நூறு நாட்களிலே காய்கள் அறுவடைக்குத் தயார்.

பாசிப் பயறு

* அதிகமான காய்ப் பிடிப்பு—மூன்று முறை காய்கள் அறுவடைக்கு வரும்.
* தனிப் பயிராக ஏக்கருக்கு 200 கி.கி. விளைச்சல்.
* கலப்புப் பயிரில் ஏக்கருக்கு 100 கி.கி. விளைச்சல்.
* புரதச் சத்து நிறைந்த பயறு.
* பயிர் வளம் பெருக்க பயிர் பாதுகாப்பு செய்திடுங்கள்.

நாற்றுப்பயிரிட ஆற்றுப் பெருக்கு எதற்கு?

(பண்ணைச் செய்தி அங்கம்—புதுடில்லி)

சாக்கோட்டை விவசாயப்பண்ணையில் (தஞ்சை மாவட்டம்) பொருத்தப்பட்டுள்ள வடிமுனைக் குழாய்—

ஆற்றுநீரை எதிர்பாராமல் நாற்றுவிட வடிமுனைக் குழாய்களைப் பயன்படுத்துங்கள். ஆற்றில் சற்று தாமத மாக தண்ணீர் வந்தால்கூட நடவுக்கு பக்குவமான நாற்று தயாராகும். முக்கியமாகத் தஞ்சை மாவட்டத்தில் ஜூன் இறுதி துவக்கத்தில் ஆற்றில் தண்ணீர் வருமுன் குறுவை நாற்றங்காலுக்கு வடிமுனைக்குழாய் மூலம் பாசனம் செய்கிறார்கள்.

* கிணறு இறக்குவதிலுள்ள பல சங்கடங்களை வடி முனைக் குழாயை இறக்கி தவிர்க்கலாம்.

மூன்று அங்குல குழாயை வைக்க 5 எச்.பி. (H P.) என்ஜின் போதும். நான்கு அங்குல குழாய் வைக்க 7 எச்.பி. என்ஜின் போதும். ஆயில் என்ஜின் அல்லது எலக்ட்ரிக் மோட்டரை உபயோகிக்கலாம். அடி நீரோட்டம் நல்ல ஊற்றுள்ளதாக இருந்தால் மணிக்கு 15,000 காலன் வரை தண்ணீர் இறைக்கலாம். குழாய் இறக்க ரூ. 400 வரை முதலீடு செய்தால் போதும்.



வடி முனைக் குழாய்க் கிணறு.

மேலும் ஆற்றில் நீரில்லாக் காலத்தில் பசுந்தாள் உரப் பயிர்கள், நிலக்கடலை, கரும்பு முதலிய பயிர்களுக்கு கோடையிலும் பாசனம் செய்து கோடைச் சாகுபடி செய்ய முடிகிறது.

காவிரிப் பிராந்தியம் தவிர செங்கல்பட்டு, வடஆற்காடு, சேலம், தென்னாற்காடு, மதுரை மாவட்டங்களிலும் இந்த வடிமுனைக் குழாய்களைப் பயன்படுத்தலாம்.

வடிமுனைக்குழாய் வைப்பதில் பலலாபங்கள் உண்டு.—

* பொருத்த அதிக இடம் வேண்டாம்.

* ஒரு இடத்தில் அது சரிப்பட்டு வராவிட்டால் எளிதில் பெயர்த்து வேறு இடத்திற்கு கொண்டு போகலாம்.

வடிமுனைக்குழாயை எல்லாவிடத்திலும் இறக்க முடியாது. நில மட்டத்திலிருந்து நிலத்துக்கு அடியில் உள்ள நீரோட்ட மட்டம் 25 முதல் 28 அடிக்குள் இருக்கவேண்டும். அருங்கோடையிலும் நிலவடி நீரோட்டம் இருக்கவேண்டும். மேல் பதினாறடி முதல் முப்பது அடி வரையில் குறைந்த பட்சம் ஆறு அடி ஆழத்துக்கு மணல் இருக்க வேண்டும்.

இந்தக் குழாய்களை உங்கள் வயல்களில் வைக்க அரசு கடனுதவி அளிக்கிறது. குழாயைப்பற்றிய விவரங்களை உங்கள் அருகில் உள்ள உதவி விவசாய பொறியாளரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.



உங்களுடைய பிரச்சினை இதுவா.... அல்லது இதுவா ?



வெள்ளம் அல்லது வறட்சி,
இந்தப் பிரச்சினையை
திட்டவட்டமாக, திறமையாகத் தீர்க்க



ஜான்ஸ்டன்

வெர்டிகல் பம்புகள்

நம்பிக்கையான ஜான்ஸ்டன் வெர்டிகல் பம்புகள் வாடிக்கைக்காரர்கள் கேட்கும் அளவுப்படி தயாரிக்கப்படுகின்றன. எளிதில் மாற்றிக்கொள்ளக்கூடிய உறுப்புகளுடன் பல்வேறு அளவுகளில் கிடைக்கின்றன. உங்கள் பிரச்சினை எதுவாக இருந்தாலும் ஜான்ஸ்டன் அதைத் தீர்க்கும்.

GROUP OF MACNEILL & BARRY LTD. COMPANIES

மேலும் விவரங்களுக்கு எழுதுங்கள் :

ஜான்ஸ்டன் பம்ப்ஸ் இந்தியா லிமிடெட்
2. போலி பிளேஸ், கல்கத்தா-1

JOHNSTON PUMPS

JPWJA TAM

விவசாயச் செய்திக் கதிர்

(M. காசிவிஸ்வநாதன், T. ரகோத்தமராவ், விரிவினைப் பிரிவு, கோவை.)

குளிர் காலப் பயிர்ச் சாகுபடி துவங்கவும், பின்பட்டப் பயிர்கள் விதைக்கவும் ஏற்ற மாதம் இது.

பருத்தி முளைத்தபின் பாதுகாப்பு

மாதமொரு முறை அல்லது தேவைக்கேற்ப கீழே குறிப்பிட்ட முறையில் மருந்தடிக்கவும்.

1. தத்துப்பூச்சி, இதர பூச்சிகளைத் தடுக்க 250 மில்லி லிட்டர் எண்டிரினை 80 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

2. காய்புழு, இலைப்புழு, தத்துப் பூச்சிகளைத் தடுக்கவும், கருங்கிளை நோய் மேலும் வராதிருக்க 200 சி. சி. ∴ பாலிடாலையும் 1 கிலோ 50 சத தாமிர பூசண மருந்தையும் 100 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

3. தாய்ப் புழுக்களையும், இதர பூச்சிகளையும், சிலந்தியையும் தடுக்க பி. எச். சி. 50 சத மருந்து 1½ கி. கி. நீரில் கரையும் கந்தகம் ½ கி. கி. ஆகிய இரண்டையும் 100 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

4. 200 சி. சி. ∴ பாலிடாலை 100 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

பருத்திக்கு உரமிடுங்கள்

இறைவைப் பருத்திக்கு 200 ராத்தல் அம்மோனியம் சல்பேட் அல்லது சி. ஏ. என். 94 ராத்தல் சூப்பர், 25 ராத்தல் மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரமிடவும் ஒரு பாதியை விதைப்பின் பொழுதும் மற்றொரு பாதியை பூ விடும் பொழுதும் விடவும்.

டி. எம். வி. 2 எள்.

* குளிர்காலப் பயிராகச் சாகுபடி செய்வதற்கேற்றது.
* விதைப்புக் காலம் அக்டோபர்—நவம்பர்.
* வயது 80 நாட்கள்.
* ஏக்கர் மகசூல் 170 கி. கி.
* காய்கள் பெரிது 6-8 அறைகள் உடையது.
* மங்கிய வெண்மை நிற பெரிய விதைகள்.
* 49 சத வீதம் எண்ணெய்ச் சத்து உள்ளது.
* தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு, தஞ்சாவூர் மாவட்டங்கள் சாகுபடி செய்வதற்கேற்றவை.

களைகள் பயிர்களின் விரோதிகள்

* பயிருக்குப் பாய்ச்சும் நீரை பகிர்ந்து கொள்கின்றன.
* மண்ணிலுள்ள பயிர் சத்துணவுகளை எடுத்துக் கொள்கின்றன.
* பயிர்களுக்கிடும் உரத்தையும் களைகள் அபகரித்துக் கொள்கின்றன.
* களைகள் பெருகி, வளரும் பயிரிடையே போதிய இடைவெளியில்லாது பயிரின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன.
* பயிர்களைத் தாக்கும் பூச்சி, பூசணங்களுக்குப் புகவிடம் தந்து தீங்கு விளைவிக்கின்றன.
* தானியங்களோடு, களைகளின் விதைகள் கலந்து, தானியத்தின் தரத்தைக் குறைக்கின்றன.
* பல்லிப் பூண்டு, புகையிலை நட்டுண்ணி, சோளம், புகையிலைப் பயிர்களின் வேர்களை நேரடியாகத் தாக்கி வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கின்றன.
* நச்சுத் தன்மை வாய்ந்த இலைகள் கால்நடைகளுக்குத் தீங்கு விளைவிக்கின்றன.
* களைகளை அப்புறப்படுத்த அனுவசிய செலவையும் ஏற்படுத்துகின்றன.

களைகள் உண்டாகிப் பரவுவதைத் தடுக்க

* களைகளின் விதைகள் கலக்காத பயிர் விதைகளை உபயோகியுங்கள்.
* உழவுக் கருவுகளை உபயோகத்திற்கு முன்னும் பின்னும் கழுவிச் சுத்தம் செய்யுங்கள்.
* பாசன வாய்க்கால்களைக் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.
* நன்கு மக்கிய கம்போஸ்ட், தொழு உரமே உபயோகியுங்கள்.
* களைகள் காணும்தோறும் அப்புறப்படுத்துங்கள். பூக்கும் முன்னரே களைந்து அழித்துவிடுங்கள்.
* பயிரற்றப் பகுதிகளையும் களைகளின்றிச் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள்.

தக்காளி இலைச் சுருட்டை நோய்

* ஒரு வைரஸ் கிருமியால் (Nicotiana Virus-10) ஏற்படுகிறது.
* தாக்கப்பட்ட செடிகளின் இலைகள் குட்டையாகவும், சிறுத்தும் தேமல் போன்ற பகுதிகள் கொண்டதாக முள்ளன.
* சிற்றிலைகள் தடித்தும், சுருக்கங்களோடும் ஓரங்களில் சுருண்டும் முனைகள் சுருள்களோடும் காணப்படும்.
* செடிகள் புதர் போன்று அடர்ந்து காணப்படும்.
* சில வேளை செடிகளில் பூக்கள் தோன்றாமல், இன விருத்தியற்றுப் போய் விடும்.

தடுப்பு முறைகள்

* வியாதிகளைப் பரவச் செய்யும் பூச்சிகளை பாராத்தியான், இகடாக்ஸ் மருந்து தெளித்து அழித்தல்.
* தாக்கப்பட்ட செடிகளை அகற்றி அழித்தல்.
* இவ்வியாதியால் தாக்கப்படும் மிளகாய், புகையிலை போன்றவற்றையும் வியாதியால் தாக்குண்டால் அகற்றுதல்.
* தாக்கப்பட்ட செடிகளின்று விதையெடுத்தல்கூடாது.

உங்கள் நிலத்திலிருந்து ஒவ்வொரு முறையும் அதிகப்படியான விளைச்சலைப் பெறுவதற்கு, போதுமான அளவு பாஸ்பேட் சத்தை அதற்கு அளிக்கவேண்டும். இந்த அத்தியாவசியமான பாஸ்பேட் சத்தை கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸூப்பர்பாஸ்பேட் நிலத்திற்கு அளிக்கிறது. பயிர்களுக்கு போஷாக்கு அளிக்கவல்ல தாவர உணவுகள் நிரம்பிய இந்த உரம், வேர்களுக்கு பலமளித்து, பயிர்களின் நல்வளர்ச்சியை துரிதப்படுத்துவதன் மூலம் மகசூலைப் பன்மடங்கு பெருக்குகிறது.

உங்களுக்குத் தேவைப்பட்டால் ‘கிரானுலேடட்’ உருவிலும் கோத்தாரி ஸூப்பர்பாஸ்பேட் கிடைக்கும். தோற்றத்தில் ரவை போன்ற இந்த உரம் கட்டிதட்டிப் போவதில்லை. ஆதலால் வெகு நாட்களுக்கு சேமித்து வைக்கலாம். உரத்தைத் தெளிக்கும்போது காற்றில் அடித்துக்கொண்டு செல்லும் காரணத்தினால் வீணாகாமல், உழவுகால்களில் நன்றாகத் தங்கி, வேர்ப்பாகங்களுக்கு எளிதில் கிடைக்கிறது.

கோத்தாரி NPK கலப்பு உரங்கள் பலதரப்பட்ட நிலங்களுக்கும் பயிர்களுக்கும் ஏற்ப, பிரத்தியேக விகிதங்களில் கிடைக்கிறது.

உங்கள் பூமியும் பொன் விளையும் பூமியே

கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸூப்பர்பாஸ்பேட் மற்றும் **NPK கலப்பு உரங்கள்** உபயோகித்து உங்கள் மகசூலைப் பன்மடங்கு பெருக்குங்கள்.

KS
KOTHARI & SONS

தயாரிப்பாளர்கள் :
ப்ளூ மவுண்டன் எஸ்டேட்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
ஓரியண்டல் பில்டிங்ஸ், அரமனைக்காரத் தெரு, மதறாஸ்-1

JWT/KS/BM/2393

கார்த்திகை - மார்கழி மாத விவசாயக் குறிப்புகள்.

(விவசாயச் செய்தி நிலையம்.)

நெல் :

* சம்பா பயிருக்கு உரமிடவும்.
* கலப்புக் கதிர் நீக்கவும்.
* முன்போக சம்பா அறுவடை—கலப்பின்றி விதை சேகரிக்கவும்.
* உங்கள் வட்டாரத்திற்கேற்ற நவரை தினுசுகளை தேர்ந்தெடுத்து விதைக்கவும்.

சிறு தானியங்களும், பயறு வகைகளும் :

* அறுவடைக்குத் தயாராயிருக்கும் சிறு தானியங்களையும், துவரையையும் அறுவடை செய்யுங்கள்.
* சம்பாவுக்குப் பின் பாசிப் பயறு, உளுந்து வகைகள் விதையுங்கள்.
* கேழ்வரகு நாற்றங்கால் தயார் செய்யுங்கள்.

பருத்தி :

* பருத்திக்கு இரண்டாம் முறை உரமிடுங்கள்.
* தொடர்ந்து மருந்தடியுங்கள்.
* சம்பாவுக்குப் பின் P 216 F பருத்தி விதையுங்கள்.

எண்ணெய் வித்து :

* இறைவை நிலக்கடலை TMV 2, TMV 3 ரகங்கள் விதைக்கவும்.
* கோடை எள்ளுக்கு நிலம், விதை தயார் செய்யுங்கள்.
* முதிர்ந்த ஆமணக்கு கொத்துகளை சேகரம் செய்யவும்.

பழ வகைகளும், காய் கறிகளும் :

* உரமிட்டு ஆறவைத்த குழிகளில் திராட்சை நடவு செய்யுங்கள்.
* திராட்சை கவாத்து செய்து உரமிட்டு மருந்தடியுங்கள்.
* காய் கறி அறுவடை தொடர்ந்து செய்யுங்கள்.

1962-ம் ஆண்டு நடந்த "உத்யான் பண்டிட்" தேர்வுக்கான அகில இந்திய வாழைச் சாகுபடி போட்டியில் தமிழ் நாட்டைச் சேர்ந்த, பட்டிவீரன்பட்டியிலுள்ள திரு. W. P. A. R. நாகராஜன் அவர்களது தோட்டமே முதன்மையானதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 1962-ம் ஆண்டுக்கான "உத்யான் பண்டிட்" பட்டத்திற்கு திரு. W. P. A. R. நாகராஜனே தகுதியுள்ளவர் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. புதுடில்லியிலுள்ள இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் எற்றதொரு வைபவத்தில் திரு. நாகராஜன் அவர்களுக்கு இப்பட்டம் வழங்கப்படும்.

இவ்வைபவத்தின் தேதியும், நடைபெறுமிடமும் விரைவில் அறிவிக்கப்படும்.

(இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், புதுடில்லி.)

எண்ணெய் வித்துக்கள் தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் "ஆமணக்கு விஸ்தரிப்பு திட்டம்"

(அரசாங்க ஆணை எண் 2694, தேதி 5-9-63. உணவு விவசாயத் துறை.)

1. சிறந்த வித்துக்கள் இலவச விநியோகம்:—

அதிக மகசூல் தரும் சிறந்த ஆமணக்கு வித்துக்களை (குறுகிய காலத்திற்கும், மானாவாரி நிலங்களுக்கும் ஏற்ற டி. எம். வி. 2 ரகமும், தோட்டக்கால் நிலங்களுக்கும் வரப்போர பயிருக்கும் ஏற்ற டி. எம். வி. 3 ரகமும்) பெருமளவில் பெருக்கி ஏற்கனவே பயிராகும் உள்ளூர் ரகங்களை மாற்றவும்; புதிய இடங்களில் பயிர் செய்வதும் இத்திட்டத்தின் ஓர் நோக்கமாகும். இதற்காக வருடா வருடம் ரூ. 18,000 பெருமான ஆமணக்கு வித்துக்களை மூன்றும் ஐந்தாண்டு திட்டம் முடியும் வரை விநியோகிக்கப்படும்.

2. ஆமணக்கு பயிருக்குப் பயிர்ப் பாதுகாப்பு:—

ஆமணக்குப் பயிரில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை விவசாயிகள் பெருமளவில் மேற்கொள்ள பூச்சி மருந்துகள் 25 சத விலையில் விநியோகிக்கப்படும். இதற்காக முழுவிலையில் ரூ. 30,000 பெருமான பூச்சி மருந்துகள் வருடா வருடம் விநியோகிக்கப்படும்

3. திட்டப் பணியாளர்கள்:—

இத்திட்டத்தைச் செயல்படுத்த இரண்டு எண்ணெய் வித்து உதவியாளர்களும், நான்கு பீல்டுமேன்களும் நியமிக்கப்படுவார்கள்.

4. சிறந்த வித்துக்கு மான்ய உதவி:—

சிறந்த வித்து உற்பத்தி செய்யும் விவசாயிகளிடமிருந்து நிலவர மார்க்கட் விலைக்கு மேல் 20 சதவீதம் அதிக விலை கொடுத்து ஆமணக்கு வித்து வாங்கப்படும்.

5. இத்திட்டம் தமிழ் நாட்டில் சாகுபடிக்கேற்ற எல்லா இடங்களிலும் 1963-64 முதல் 1965-66 வரை மூன்று வருடங்களுக்கும் அமுலிலிருக்கும். இதற்காக செலவிடப்படும் தொகை ரூ. 1,68,404 ஆகும்.

6. இத்திட்டத்தின் மூலம் மூன்று ஆண்டுகளில் 90,000 ஏக்கர்களில் ஆமணக்கை கலப்புப் பயிராக பயிரிட்டு அதன் மூலம் 2,250 டன் அதிக உற்பத்தியும், 30,000 ஏக்கர்களில் பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டு 750 டன் அதிக உற்பத்தியும் அடைவதே குறிக்கோள்.

அரசாங்கம் அளிக்கும் இச்சலுகைகளைப் பயன் படுத்திக் கொண்டு ஆமணக்கு நிறைய பயிரிடுவீர்.

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 44425/63 தேதி 10–4–63 உத்தரவின்படி

1963-64 "ரேட் கான்ட்ராக்ட்" திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஸ்பிரேயர்கள்



'கேடார்'
அசைப்பு ஸ்ப்ரேயர்



'மாருதி'
ஃபுட் ஸ்ப்ரேயர்



'மாருத்'
கையமுத்த ஸ்ப்ரேயர்



'கேடார்–கோஃபி'
அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள்

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

மார்வே ரோடு, மலாடு, பம்பாய்-64.

தமிழ்நாடு, மைசூர் வினியோகஸ்தர்கள் :

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,

93, ஸ்ரீ நரசிம்மராஜா ரோடு,

தபால் பெட்டி நெம்பர் 539, பெங்களூர்-2.

கால்நடை சுகாதார வெளியீடு-செப்டெம்பர் '63.

(தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை நெறியாளர், சென்னை.)

தமிழ் நாட்டில் செப்டம்பர், '63-ல் கால்நடைகளுக்கு விளைந்த தொத்து நோய்களின் விளைவும், மரணமும், இதற்கு முந்திய மாதத்துடனும், கடந்த ஆண்டு இதே மாதத்துடனும் (செப்டம்பர் '62) ஒப்பிடுகையில் கணிசமான அளவு குறைந்துள்ளது. 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 59 தடவை தொத்து நோய்கள் தோன்றி 265 கால்நடைகள் இறந்தன. இதற்கு முந்திய மாதம் 86 தடவை தொத்து நோய்கள் விளைந்து 318 கால்நடைகள் மரித்தன. சென்ற ஆண்டு இதே மாதம் 70 முறை கண்டு 387 கால்நடைகள் மாண்டன.

வெக்கை நோய்.—இம் மாநிலத்தில் வெக்கை நோய் தொல்லை எங்கும் இல்லை.

முன்னறிவிப்பு.—இந்நோய் டிசம்பர் 1963-ல் எங்கும் தோன்றாது.

தொண்டை அடைப்பான்.—இம் மாதம்] இந் நோயின் விளைவும், மரணமும் முந்திய மாதத்தை விட கணிசமான அளவு குறைந்துள்ளது. 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 19 தடவை இந் நோய் தோன்றி 72 கால் நடைகள் இறந்தன. சென்ற மாதமோ 31 தடவை விளைந்து 110 கால்நடைகள் மாண்டன. கடந்த ஆண்டு இதே மாதம் (செப்டம்பர் '62) 26 முறை கண்டு 129 கால்நடைகள் மரித்தன. இம் மாதம் தென் ஆற்காடு மாவட்டத்தில் இந் நோய் சற்று அதிகமாகக் காணப் பட்டது.

முன்னறிவிப்பு.—டிசம்பர் 1963-ல் திருநெல்வேலி, திருச்சி, தஞ்சாவூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு, நீலகிரி, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் இந் நோய் தோன்றக்கூடும்.

சப்பை நோய்.—இந் நோயின் விளைவும், மரணமும் முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில், இம் மாதம் கணிச மான அளவு குறைந்துள்ளது. இம் மாதம் 27 முறை கண்டு 95 கால்நடைகள் இறந்தன. முந்திய மாதம் 43 தடவை தோன்றி 146 கால்நடைகள் மரித்தன. சென்ற ஆண்டு இம் மாதம் (செப்டம்பர் '62) 25 தடவை விளைந்து 92 கால்நடைகள் மாண்டன. வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் (வடக்கு சரகம்) ஆகிய மாவட்டங் களில் இந் நோய் சற்று அதிகமாகக் காணப்பட்டது.

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் நவம்பர் மாதத்தில் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விவரம்.

கிடைக்குமிடம்.	கையிருப்பு எண்ணிக்கை.	ஒன்றின் விலை. ரூ. ந.பை.
தென்னை நாற்றங்கால், குடியாத்தம், வட ஆற்காடு ஜில்லா.	2,000	0 65

விவசாயத் துறைச் செய்திகள்

கரும்பு அபிவிருத்தி :—

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகா விலுள்ள படாலம் என்ற இடத்திலும், கோவை மாவட்டத்தில் எ. கே. புத்தூரிலும், மதுரையில் ராஜதானிக் கோட்டையிலும் ஒரு ஜோனல் கரும்பு பண்ணை இருப்பது தெரிந்ததே.

இது 1963–64 வருடத்திலும் தொடர்ந்து இருந்து வரும்.

(அரசாங்க ஆணை எண். 1579, உணவு-விவசாயம், தேதி 9-5-63.)

முன்னறிவிப்பு.—டிசம்பர் 1963-ல் இந் நோய் திருநெல்வேலி, வட ஆற்காடு, கோயம்புத்தூர், திருச்சி, (வடக்கு, தெற்கு சரகங்கள்) கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தோன்றக் கூடும்.

அடைப்பான்.—இம் மாதம் இந் நோய் 4 தடவை தோன்றி 24 கால்நடைகள் இறந்தன. சென்ற மாதம் 4 தடவை விளைந்து 28 கால்நடைகள் மாண்டன. கடந்த ஆண்டு இம் மாதம் (செப்டெம்பர் '62) 3 முறை கண்டு 21 கால்நடைகள் மரித்தன.

சுர்ரா எனும் விஷ ஜுரம்.—இம் மாதம் இந்நோய் 2 தடவை விளைந்து 3 கால்நடைகள் இறந்தன. ஆனால் சென்ற மாதமோ, 5 தடவை தோன்றி 12 கால்நடைகள் மாண்டன. கடந்த ஆண்டு இம் மாதம் (செப்டெம்பர் '62) ஒரு முறை கண்டு 2 கால்நடைகள் மரித்தன.

செம்மறியாட்டு அம்மை நோய்.—இம் மாதம் இந்நோய் 2 தடவை விளைந்து மரணம் எதும் நிகழவில்லை. முந்திய மாதம் இந்நோய் தோன்றவே இல்லை. ஆனால் கடந்த ஆண்டு இம்மாதம் (செப்டெம்பர் '62) ஒரு முறை கண்டு 38 ஆடுகள் மாண்டன.

கழிச்சல் நோய் (செம்மறி ஆடுகள்).—இம்மாதம் இந் நோய் ஒரு தடவை விளைந்து 17 ஆடுகள் இறந்தன. ஆனால் சென்ற மாதம் 3 தடவை தோன்றி 25 ஆடுகள் இறந்தன. ஆயின் சென்ற ஆண்டு இதே மாதமோ (செப்டெம்பர் '62) 7 முறை கண்டு 98 ஆடுகள் மாண்டன.

கோழி கழிச்சல் நோய்.—இம் மாதம் இந் நோய் 2 தடவை விளைந்து 52 கோழிகள் மரித்தன. ஆனால் சென்ற மாதமும், கடந்த ஆண்டு இதே மாதமும் (செப்டெம்பர் '62) இந் நோய் தோன்றவே இல்லை.

நாயின் வெறி நோய்.— இம் மாதம் இந் நோய் 2 தடவை தோன்றி 2 நாய்கள் இறந்தன. சென்ற மாதம் இந் நோய் தோன்றவே இல்லை. ஆனால் கடந்த ஆண்டு இதே மாதமோ (செப்டெம்பர் '62) 7 தடவை விளைந்து 7 நாய்கள் இறந்தன

1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திய கால நிலை அறிக்கை

(சி. பாலசுப்பிரமணியன், சி. ரங்கநாதன், விவசாயக் காலநிலை ஆய்வுப் பிரிவு, கோயமுத்தூர்-3.)

இம்மாதத்தில் முதல் மூன்று தினங்களில் தமிழ் நாட்டின் சிற்சில இடங்களில் மழை பெய்தது. ஆனால் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4-ம் தேதியன்று தமிழ் நாடெங்கும் பரவலாக மழை இருந்தது. தொடர்ந்து 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5-ம் தேதி பரவலாகவும், 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6-ம் தேதி ஒரு சில இடங்களிலும் பருவ மழை பொழிந்தது. அதன் பின்னர் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7-ம் தேதி முதல் தொடர்ச்சியாக நான்கு நாட்கள் தமிழ் நாட்டில் பொதுவாக வறட்சி நிலவியது. பிறகு 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11-ம் தேதி முதல் இம்மாதம் முடிய தமிழகத்தின் சிற்சில இடங்களில் மட்டும் மழையிருந்தது. ஆனால் 16, 18, 26, 31 தேதிகளில் மட்டும் ஆங்காங்கு இடியுடன் கூடிய கனத்த மழை இருந்தது. இம்மாதத்தில் பகல் வெப்பநிலை எல்லா நாட்களிலும் சீராகவே இருந்தது.

கால நிலையும் பயிர் வளர்ச்சியும்.—செங்கல்பட்டு மாவட்டத்தில் இம்மாதம் பெய்த மழை சொர்ணவாரி நெல் அறுவடை செய்ய தடையாயிருந்தது. இம்மழையால் நெல் காயவும் பதர் அடிக்கவும் கடினமாயிருந்தது. வட ஆற்காடு மாவட்டத்தில் இம்மாதத்தில் பெய்த மழை நெல், கரும்பு, மரவள்ளி, மற்றும் நிலக்கடலை, சோளம் முதலிய பயிர்களுக்கு ஏற்றதாக இருந்தது. ஆனால் பாலூர் பகுதிகளில் பருத்தி பறிப்புக்கு தடையாயிருந்தது. தென்னாற்காடு மாவட்டத்தில் சற்று அதிகமாக மழையிருந்தது. இம்மழையால் நிலக்கடலை பயிர் வெகுவாக பயனுற்றது. ஆனால் இப்பயிரை சுருள் பூச்சிகள் கடுமையாக தாக்கின. தஞ்சாவூர் மாவட்டத்தில் இலேசான மழையிருந்தது. இம்மழை நெற்பயிருக்கு பெரிதும் பயன்பட்டது. ஆனால் இங்கு குறுவை நெற்பயிரை ஆனைக் கொம்பு பூச்சி (Gall-fly) யும், சம்பா நெற் பயிரை நாவாய் பூச்சிகளும், திரிப்ஸும் (Thrips) தாக்கின. பட்டுக்கோட்டை பகுதிகளில் சற்று கனமான மழையிருந்தது. இம்மழையால் குறுவை நெற்பயிர் மிகவும் பயனடைந்தது. மன்னார்குடி பகுதிகளில் மழை மிகவும் குறைவு. இங்கு பெய்த சிறிதளவு மழையும் குறுவை நெல் நடவுக்கு உகந்திருந்தது. இவ்வூர் பகுதிகளில் குறுவை நெற் பயிரை எலிகள் பெரிதும் சேதமாக்கின. எலிகளை ஒழிக்க தனிக் கவனமும், பிரத்தியேக நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சுமாராக மழையிருந்தது. இம்மழை நிலங்களை பண்படுத்தவும், சோளம், கம்பு, நிலக்கடலை மற்றும் பருத்தி விதைப்பதற்கும் பேருதவி புரிந்தது. இங்குள்ள நஞ்சை நிலங்களில் குறுவை நாற்றங்கால்களுக்கும், நடவுக்கும் இம்மழை உகந்திருந்தது. மதுரை மாவட்டத்தில் பெய்த சிறிது மழையும், மானாவாரி பயிர்கள் விதைப்பதற்கு உதவிற்று. மேலும் இம்மழை நெல், மிளகாய் போன்ற பயிர்களுக்கு ஏற்றதாயிற்று. இங்கு நிலக்கடலையை சுருள் பூச்சியும், நாவாய் பூச்சிகளும், திரிப்ஸும் தாக்கின. இராமனுதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் இம்மாதம் மழை போதிய அளவுள்ளதாக இல்லை. இம்மாவட்டங்களில் சிற்சில பகுதிகளில் நிலங்கள் உழுது பண்படுத்தப்பட்டன. மேலும் சாத்தூர் பகுதிகளில் ராகி, வெங்காயம் முதலியவை இம்மாரியினால் பயனுற்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சற்று அதிகமாகவே மழை பெய்திருக்கிறது. இதனால் முதிர்ந்த நெற்பயிர்கள் சிறிது பாதிக்கப்பட்டன. அறுவடை செய்ய மிகவும் கடினமும் சேதமும் ஆயிற்று.

கோயமுத்தூர் மாவட்டத்தில் மழை சற்று பரவலாக பெய்தது. போதிய மழையின்மையால் காரமடை, அவனாசி, அன்னூர் பகுதிகளில் கோடைப் பயிர்கள் விதைப்புக்கும், குறிப்பாக பருத்தி விதைப்புக்கும் தாமதமாயிற்று. மிளகாய், காய்கறிப் பயிர்கள், ராகி முதலிய பயிர்கள் மழையின்மையால் வாட்டமுற்றன.

அவனாசி பகுதிகளில் நிலக்கடலையில் சிவப்பு கம்பளிப் பூச்சிகள் சில இடங்களில் காணப்பட்டன. சேலம் மாவட்டத்தில் பெய்த சுமாரான மழையும் சிறுதானிய விதைப்புக்கும், நிலக்கடலை விதைப்புக்கும் உதவியது. இம்மழையால் வீரபாண்டி, பெத்தநாய்க்கன் பாளையம் பகுதிகளில் சிவப்பு கம்பளிப் பூச்சிகள் வெகுவாக தலைப்பட்டன. புதுச்சத்திரம் பகுதிகளில் நிலக்கடலையை இப் பூச்சி மிகமிக கடுமையாக தாக்கின. நிலக்கடலையில் சுருள் பூச்சியும், ஆமணக்கில் கொக்கிப் புழுவும் சிறிதளவு தாக்கின.

நீலகிரி மாவட்டத்தில் மழை சிறிது குறைவு. இம்மழையால் காய்கறிப் பயிர்கள், உருளைக்கிழங்கு மற்றும் தோட்டக்கால் பயிர்கள் பெரிதும் பயனடைந்தன. நஞ்சநாடு பகுதிகளில் உருளைக்கிழங்கு நடவுக்கு தாமதமாயிற்று.

இம்மாதத்தில் குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழையளவுகளும் பின்வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவு (அங்குலத்தில்).

தேதி. (1)	இடத்தின் பெயர். (2)	மழையளவு. (3)
5-8-1963	நாகப்பட்டினம்	.. 2·13
12-8-1963	கன்னியாகுமரி	.. 4·35
31-8-1963	திண்டிவனம்	.. 4·29

பிராந்திய மழையளவு (அங்குலத்தில்).

பிராந்தியத்தின் பெயர்.		ஆகஸ்டு மாத மழையளவு	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)		(2)	(3)	(4)
வட பிராந்தியம்	..	5·0	—0·5	குறைவு.
கீழ்க்கரைப் பிராந்தியம்	.	6·0	+1·1	அதிகம்.
மத்தியப் பிராந்தியம்	..	2·4	—1·1	குறைவு.
தென் பிராந்தியம்	..	2·5	+0·7	அதிகம்.
மலைப் பிராந்தியம்	..	3·6	—1·6	குறைவு.

1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதக் கால நிலை அறிக்கை மழையளவு (அங்குலத்தில்)

இடத்தின் பெயர்.	இம்மாத மொத்த மழையளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழையளவு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்) ..	5·6	+1·0	17·0
திரூர்க்குப்பம் *	6·5	—0·5	16·0
வேலூர்	5.0	—0·8	15·2
குடியாத்தம் *	2·8	—1·7	16·1
கீழ்க்கரைப் பிராந்தியம்.			
பாலூர் *	5·2	—0·3	22·3
திண்டிவனம் *	10·2	+3·7	29·6
கடலூர்	5·2	—0·4	19·2
நாகப்பட்டினம்	6·9	+3·9	16·1
ஆடுதுறை *	2·6	—1·2	18·9
பட்டுக்கோட்டை *	5·6	+1·0	20·1
மத்தியப் பிராந்தியம்.			
சேலம்	6·6	†	20·1
கோயம்புத்தூர் *	1·1	+0·2	8·2
கோயம்புத்தூர்	1·3	+0·1	6·4
திருச்சிராப்பள்ளி	0·6	—3·5	5·7
தென் பிராந்தியம்.			
மதுரை	0·8	—3·3	17·5
பாம்பன்	0·6	—0·4	14·5
கோவில்பட்டி *	0·7	—0·6	14·9
பாளையங்கோட்டை	0·7	—0·7	21·2
அம்பாசமுத்திரம் *	0·2	—0·2	27·0
நாகர்கோவில் *	6·6	+3·7	26·6
கன்னியாகுமரி *	8·0	+6·6	26·7
மலைப் பிராந்தியம்.			
கொடைக்கானல்	3·4	—3·6	33·5
கூனூர் *	1·4	—1·2	28·9
உதகமண்டலம் *	3·5	—0·8	25·1
நஞ்சநாடு *	6·2	—0·6	39·2

குறிப்பு.—* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள். † 0·01

மேழிச் செல்வம் சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

1963 டிசம்பர் மாதத்தோடு முடிவாகும் "மேழிச் செல்வம்" மாத இதழ் சந்தாதாரர்களின் சந்தா எண், மாவட்ட ரீதியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டம.	சந்தா எண். ஆரம்பம்.	முடிவு,
செங்கல்பட்டு	2451	2571
தென் ஆற்காடு	3783	4100
வட ஆற்காடு	8037	8358
தஞ்சாவூர்	8579	8799
திருச்சி	6361	6584
சேலம்	4609	4744
மதுரை	1873	2018
கோயமுத்தூர்	1844	2019
இராமநாதபுரம்	1488	1638
திருநெல்வேலி	6010	6126
நீலகிரி	5173	5177
கன்னியாகுமரி	1194	1212
உள்ளூர் சந்தா	2206	2235

மேழிச் செல்வம் தொடர்ந்து பெற உடனடியாக சந்தா தொகையாகிய ரூ. 3 (மூன்று மட்டும்) அருகிலுள்ள விவசாய அலுவலகத்திலாவது அல்லது பணத்தை மணியார்டர் மூலமாக கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பியாவது புதுப்பித்துக் கொள்ளுங்கள். **புதுப்பிக்கும்போது தவறாமல் சந்தா எண்ணை அதில் குறிப்பிடவும்.**

வேளாண்மைத்துறை நெறியாளர்,
தபால்பெட்டி எண். 412,
சேப்பாக்கம், சென்னை–5.

சந்தா விவரம் :—

	ரூ.	ந.பை.
தனிப்பிரதி விலை	0	25
சித்திரை மலர்	0	50
ஆண்டு சந்தா	3	00

ஆறுமாத சந்தா கிடையாது. தபால் தலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால் சந்தா எண்ணைத் தெளிவாகக் குறிப்பிட்டு மேல்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்கவும்.

ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்

1963-ம் வருடம் நவம்பர் மாத கிராம நிகழ்ச்சிகளின் விவரம்.

வெள்ளி (1—11—63)

தேசப்பக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டுகள்.
கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சி.

சனி (2—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
நுகத்தடிப்பம்.
நம் மாதர் மன்றம்—
1. தாய்மை நிலைகாப்பு.
2. சத்ய நெறி.
3. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (3—11—63)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
புகையிலை சாகுபடி—உரையாடல்.
கிராமம் போவோமே—செய்தி சித்திரம்.

திங்கள் (4—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
தேவாரம்.
விஞ்ஞான கூடம்.
உடல் உறுப்புகள்—நரம்பின் அமைப்பு.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
நம்பிக்கை—நாடகம் (எஸ். பூமிநாதன் எழுதியது).

செவ்வாய் (5—11—63)

தேசப்பக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டுகள்.
கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சி.

புதன் (6—11—63)

திருவாசகம்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
பட்டாசுகளினால் ஏற்படும் விபத்துக்கள்.
சரித்திரக்கதைகள் பிரசித்திபெற்ற படையெடுப்புகள் (தொடர் நிகழ்ச்சி).
ஷகாரி சிங்காரம்—சித்திரம்.

வியாழன் (7—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருக்குறள் விளக்கம்.
பக்திப்பாடல்.
நமது திட்டம்.
மூன்றாவது திட்டத்தில் மீனவர்களுக்கு உதவி—உரையாடல்.
செய்தி விளக்கம்.

வெள்ளி (8—11—63)

தேசபக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டு.
கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சி.

சனி (9—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
கோழிகளைத் தாக்கும் நோய்—பெரும்பாதம்—உரையாடல்.
பக்திப்பாடல்.
நம் மாதர் மன்றம்—
1. எங்கள் கிராமத்தில்.
2. சத்ய நெறி.
3. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (10—11—63)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
மாங்காய் மகசூல்—உரையாடல்.
நம் நாட்டு விவசாயி—கடிதம்.
கிராமியக்கலை.

திங்கள் (11—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
திருப்புகழ்.
விஞ்ஞான கூடம்—உடல் உறுப்புகள்—நாம் போர்த்தியுள்ள தோல்.
எழுத தெரியாதவர்—நாடகம் (எஸ். பூமிநாதன் எழுதியது).

செவ்வாய் (12—11—63)

தேசபக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி—குழந்தைகள் தினம்.
அறிவிப்புகள்.
படப்பாட்டுகள்.
கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சி.

புதன் (13—11—63)

பாசுரம்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
டிப்திரியா—உரையாடல்.
சரித்திரக்கதைகள்—பிரசித்திபெற்ற படையெடுப்புகள் (தொடர் நிகழ்ச்சி).
சிக்கனசெல்வம் (என். ராகவன் எழுதியது).

வியாழன் (14—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருக்குறள் விளக்கம்.
பக்திப்பாடல்.
நமது திட்டம்.
கிராமங்களில் தொழிற்சாலை—உரையாடல்.
செய்தி விளக்கம்.

வெள்ளி (15—11—63)

தேசப்பக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டு.
கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சி.

சனி (16—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
பொதிகாளைகளின் பராமரிப்பு.
நம் மாதர் மன்றம்.
தீவிளிக்கு தீவிளி—இசைச் சித்திரம் (என். ராகவன் எழுதியது).
சத்ய நெறி.
நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (17—11—63)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
லாபகரமான இஞ்சி சாகுபடி.
கிராமச்சாவடியில் பேயோட்டிய வழக்கு விசாரணை (தனஞ்சயன் எழுதியது).

திங்கள் (18—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
சித்தர் பாடல்.
விஞ்ஞானகூடம்—உடல் உறுப்புகள்—காணும் கண்.
மன்மதன் (என். ராகவன் எழுதியது).

செவ்வாய் (19—11—63)

தேசபக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டுகள்.
கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சி.

புதன் (20—11—63)

திருப்புகழ்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
டிடானஸ் தடுக்கும் முறை.
சரித்திரக் கதைகள்–பிரசித்திபெற்ற படையெடுப்புகள் (தொடர் நிகழ்ச்சி).
உழைப்பாழி உலகநாதன் (என். ராகவன் எழுதியது).

வியாழன் (21—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருக்குறள் விளக்கம்.
பக்திப்பாடல்.
நமது திட்டம்.
குடும்பக்கட்டுப்பாடு திட்டம்.
செய்தி விளக்கம்.

வெள்ளி (22—11—63)

தேசபக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டு.
கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சி.

சனி (23—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
தீனிப்பை நோய்.
நம் மாதர் மன்றம்—
1. பெண்களும் சிறு சேமிப்பும்.
2. சத்ய நெறி.
3. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (24—11—63)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
எலுமிச்சை ரகங்கள்.
கிராம முன்னேற்றம்—பேட்டி.
நாட்டுப் பாடல்கள்.

திங்கள் (25—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
அறிவிப்புகள்.
பாசுரம்.
விஞ்ஞானகூடம்—உடல் உறுப்புகள்—நாம் கேட்பது எப்படி ?
வளரும் தமிழகம்.

செவ்வாய் (26—11—63)

தேசபக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டுகள்.
கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சி.

புதன் (27—11—63)

சித்தர் பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கீல்வாதமும், சிகிச்சையும்.
செய்தித்தாள்.
கடைசிக்காட்சி (எஸ். பூமிநாதன் எழுதியது).

வியாழன் (28—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
பக்திப்பாடல்.
அறிவிப்புகள்.
திருக்குறள் விளக்கம்.
நமது சாதனை.
தேங்காய் ஆராய்ச்சிகூடம்—காரைக்குடி.
செய்தி விளக்கம்.

வெள்ளி (29—11—63)

தேசபக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டு.
கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சி.

சனி (30—11—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
கோழிப்பண்ணைக்கு மலிவான வீடுகள்.
நம் மாதர் மன்றம்—
1. ஆப்பக்கார அங்காயி.
2. சத்ய நெறி.
3. நாட்டுப்பாடல் பயிற்சி.

துவரை ஆராய்ச்சியில் கண்ட ஓர் வெற்றி

(சி. கே. ராஜகோபாலன், ஆர். சம்பந்தம், பயறுவகை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.)

துவரையில் ஒரு அதிசயம் எம். எஸ். 9537

* இதன் காய்களை பட்டாணி போல் சமைக்கலாம்.

* இதற்கு முக்கால்பங்கு முற்றிய காய்களைப் பறிக்க வேண்டும்.

* இது ஒரு சிறு மரமாக வளர்ந்து 3 வருடங்கள் வரை காய்கள் தருகிறது.

* இதை சுலபமாக எங்கும் பயிரிடலாம்.

துவரை எம். எஸ்: 9537 காயும் கிளையும்

ஆறடி இடைவெளியில், வரிசையாக, ஓரடி ஆழமுள்ள குழிகள் வெட்டி எருப்போட்டு தயார் செய்ய வேண்டும். பருவ மழைக்குப்பின் ஆனி-ஆடி மாதங்களில் குழிக்கு ஒரு விதை வீதம் விதைக்க வேண்டும். மழையில்லாவிடில் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். செடிகள் வேகமாக வளர்ந்து விடும். தை மாதத்தில் முதல் காய்கள் பறிக்கலாம். ஆண்டுதோறும் இப்படியே தை மாதத்தில் காய்கள் கிடைக்கும். காய்கள் அறுவடையான பின் செடிகளின் கீழ் கொத்தி விட்டு எருப்போட வேண்டும். மழை இல்லாவிடில் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். புதுக் கிளைகள் வளருவதற்கு செடிகளின் நுனியை வெட்ட வேண்டும்.

துவரை எம். எஸ். 9537 வரிசையில் செடிகள்

* முதல் வருடம் பத்து பவுண்டும், 2-வது வருடத்திலிருந்து 20 பவுண்டு வரையிலும் காய்கள் கிடைக்கும்.

* காய்களின் பாதி எடைக்கு பயறு கிடைக்கும்.

* மூன்றுவது வருடத்திலிருந்து காய்ப்பு குறைந்துவிடும். அச்சமயம் செடிகளை வெட்டி எடுத்துவிடவேண்டும்.

எம். எஸ். 9537 துவரையை வயல்களின் பெரிய வரப்புகளிலும், வேலி ஓரங்களிலும், வீட்டுப் புழக்கடைகளிலும் சுலபமாக பயிரிடலாம். இரண்டு அல்லது மூன்று மரங்கள் ஒரு சிறிய குடும்பத்திற்கு போதும்.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1963



நியூ ஈரா தட்டைப் பயறு

- காய்கறியாகவும், பயறுக்காகவும் சாகுபடி செய்ய ஏற்றது
- 90 நாட்களில் 1.500 கிலோ காய்கறி மகசூல் அளிக்கிறது

நியூ ஈரா செடியின் தோற்றம்

நியூ ஈரா பயிரின் தோற்றம்

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு, விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.